# தொழிலியல்



பாட்டோவியம்

கரவாமல் தொழில் செய்யும் கருத்துடைய

நல்லோர்
கண்துஞ்சார்
பசிநோக்கார்
களி மறதி கொள்ளார்
இரவாமல் ஈந்திடுவார்
எண்ணமெலாம் தூயர்

என்றென்றும் சுறுசுறுப்பாய் இயங்கி நலம் புரிவார்

திரு.அடிகளாசிரியர்

(நூறாவது ஆண்டு தொடக்க விழா வெளியீடு)

# தொழிலியல்

(தொழில் அமைப்புப் பற்றிக் கூறும்

ஓர் இனிய இலக்கியம்)

**திரு. அழகளாசிரியர்**

ஓய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர்.

கிடைக்குமிடம்

**திருவருள் நிலைய வெளியீட்டகம்**

குகையூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி வட்டம்,

விழுப்புரம் மாவட்டம் – 606 306.

தமிழ்நாடு.

## நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **தொழிலியல்** |
| ஆசிரியர் | : | திரு.அடிகளாசிரியர் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியிடப்பட்ட நாள் | : | மே -1,2009 |
| உரிமை | : | **திரு.அடிகளாசிரியர்** |
| அளவு | : | 18 13 |
| பக்கங்கள் | : | 8 + 62 |
| படிகள் | : | 1000 |
| அச்சகம் | : | **சூர்யா பிரிண்டர்ஸ்,** சேலம் |
| விலை | : | 50-00 |
| வெளியீட்டாளர் | : | **திருவருள் நிலைய வெளியீட்டகம்** குகையூர், கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 606 306. தமிழ்நாடு. |

# பொருளடக்கம்


முன்னுரை

நினைவு

முதல்வனைப் போற்றுதல் — பாட்டு 1

தோற்றுவாய் — பாட்டு 2, 3

தொழில் முதனிலை — பாட்டு 4 முதல் 18 வரை

தமிழர்தம் பொருளிலக்கணச் செய்தி — பாட்டு 19, 20

திருக்குறளும் தொழிலும் — பாட்டு 21 முதல் 29 வரை

கீதையும் தொழிலும் — பாட்டு 30, 31

செயல்முறை — பாட்டு 32 முதல் 48 வரை

பின்னிணைப்புகள் — 1. நூலாசிரியரின் அரசியல் இயக்கப் பாட்டொன்று

2. நூலாசிரியரின் பிற நூல்கள்

# சிறப்புப் பாயிரம்

குகையூர் சித்தநாதேச்சுராதீன குருபரம்பரையின் மாணவராகியும் ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியராகியும் உள்ள உயர்திரு புலவர் இரா. கிருஷ்ணசாமி அவர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரம்.

திருவாக்கும் தொழில்சிறக்கச் செந்தமிழின் பேர்சிறக்க
உருவாக்கித் தொழிலியல்நூல் உலகவர்க்குத் தந்தவொரு
அருளாக்கும் நல்லாசான் அடிகளவர் நற்புகழாம்
பொருளாக்கம் மிகச்சிறக்கப் பூதலத்தில் வாழியரோ

காப்பவன் உரைத்த கீதைக்
கருத்தினை ஆய்ந்து தொன்மைக்
காப்பியக் கடலுள் மூழ்கிக்
கருத்தெனும் முத்தைத் தேர்ந்து
யாப்புறும் குறள்நூல் நன்னூல்
நவிலுமோர் பொருளும் நாடி
யாப்பினால் தொழிலின் நூலை
நலம்பெறச் செய்தார் வாழி!

இறைவன் துணை

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

"இரவாமல் தொழில் செய்யும் கருத்துடைய நல்லோர்
கண் துஞ்சார்
பசி நோக்கார்
களி மறதி கொள்ளார்
இரவாமல் ஈந்திடுவார்
எண்ணமெல்லம் தூயர்.

என்றென்றும் சுறுசுறுப்பாய் இயங்கி நலம் புரிவார்"

என்பது "தொழிலியல்" நூலின் தொடக்கப்பாட்டாகும்.

இப்பாட்டின் படி தொழிலைச் செய்து உலக மக்களை வாழ்விப்பவர் தொழிலாளியாகும் அவர்களின் பலவகை இயல்புகளையெல்லாம் நன்கு விளங்குமாறு எடுத்துக் கூறுவது தொழிலியல் என்ற இவ்விலக்கியத்தின் பணியாகும்.

**இதனை இப்பொழுது (01.05.2009) இரண்டாம் பதிப்பாக என்னுடைய நூறவது ஆண்டின் தொடக்க வெளியீடாக நான் வெளியிடுகிறேன்.**

இவ்விலக்கியம் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி எந்நாட்டு மக்களுக்கும் தொழில் வளர்ச்சியில் ஊக்கத்தை உண்டாக்கி நலத்தை செய்ய வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

**தொழிலாளர் தினமான மே–1 அன்று வெளியிடப்படும் தொழிலியல் என்ற இந்நூலினை**

அன்பர்களும், தொண்டர்களும் நன்கு படித்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூலினை முயன்று அச்சிட்டுக் கொடுத்த எங்கள் சீடரும், குடும்ப மருந்துவருமாகிய டாக்டர். அ.விசுவநாதன், எம்.டி., அவர்களுக்கு என்னுடைய வாழ்த்தினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உலகம் வாழ, உறு தொழில்

செய்பவரே, தெய்வம் கண்டீர்".

என்று கூறி அத்தெய்வத்தை வாழ்த்தி இவ்வுரையை முடிக்கின்றேன்.

இங்ஙனம்

**திரு. அடிகளாசிரியர்**

ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்

1.05.2009 சித்தநாதேச்சுர ஆதீனம்

குகையூர் குகையூர்

# நினைவு

கொங்கு நாட்டிலே ஈரோட்டிற்கும் தெற்கே உள்ளது குளாநல்லி என்னும் ஊராகும். குழல்நல்லி என்னும் பெயருடைய பெண்தெய்வம் ஒன்று கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் காரணத்தால் அப்பகுதி குழல்நல்லி என்று பெயர் கூறப்பட்டது. பின் அப்பெயரை மக்கள் திரித்து குளாநல்லி என்று வழங்கத் தொடங்கினர். அக் குளாநல்லி என்னும் ஊரை அடுத்து விளங்குவது நடுப் பாளையம் என்னும் சிற்றூராகும். அவ்வூரிலே குகையூர் சித்தநாதேச்சுர ஆதீனத்திற்குச் சீடர்களாய் கைக்கள பாளையத்திலிருந்து வந்து குடியேறிய செங்குந்தப் பெருமக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் சிறந்து விளங்கியவர் குருநாத முதலியார் என்பவர் ஆவர். அவருக்குத் தங்கப்ப முதலியார், பொன்னப்ப முதலியார், சின்னப்ப முதலியார் என்று மூன்று புதல்வர் தோன்றினர். அவர்களில் கடைசியாராகிய சின்னப்ப முதலியாருக்கு முதல் புதல்வராகத் தோன்றியவர் ஆறுமுக முதலியார் என்னும் சிறந்தோராவர்.

திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் அன்பு, அறிவு, நல்லொழுக்கம், முயற்சி முதலான நற்பண்புகளைப் பெற்றவர். அவர் உரிய காலத்தில் நற்குணம் வாய்ந்த நஞ்சம்மாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தை நன்கு நடத்தி வந்தார். பின்னர் வியாபாரத்தின் பொருட்டு ஈரோட்டிற்கு வந்து அங்கு சிறந்த வியாபாரத் தொழிலை மேற்கொண்டு அங்கேயே தங்கிவிட்டார். அவர் நல்ல சமயப் பற்றுடையவர். என்பால் தீட்சை செய்து கொண்டு இலிங்கதாரணம் உடையவராய் சிறப்பாகச்

சிவபூசை செய்து வந்தார். தென்னாடு, வடநாடு ஆகிய இடங்களில் உள்ள சிவாலயங்களுக்கெல்லாம் யாத்திரை செய்து சிவதரிசனமும் செய்து வந்த பெருஞ்சீலராவர். அன்னார் ஆங்கிரஸ ஆண்டு மார்கழித் திங்கள் 1ஆம் தேதி அதிகாலை தம் 88ஆம் வயதில் இறைவன் திருவடியை அடைந்துவிட்டார்.

இறைவனடி அடையும் இறுதிப்பொழுதில் அவர் குரு காணிக்கையாக ஒரு ஆயிரம் ரூபாயை மிக நினைவாக எனக்கு அனுப்பி வைத்தார். இவருடைய இச்செயலை அறிந்து நான் மிகவும் மனம் உருகினேன். அவர் அனுப்பிய ஆயிரம் ரூபாயை அடியாக வைத்துத் "தொழிலியல்" என்னும் இவ்விலக்கியத்தை எழுதி அவர் நினைவாக அச்சிட்டு வெளியிடுகின்றேன். அவர் உயிர் இறைவனடியில் நின்று அமைதி பெறுவதாகுக.

இங்ஙனம்

திரு. அடிகளாசிரியர்
சித்தநாதேச்சுராதீனம், குகையூர்,
26—04—93.

## எனது நூறாண்டின் தொடக்கம்

மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி என்ற தலைப்பில் மறைமலை அடிகளார் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். ஆனால் அவர் நூறு ஆண்டு வாழ்ந்திருக்கவில்லை.

அடிகளாசிரியனாகிய நான் மக்கள் நாறாண்டு வாழ்வது எப்படி என்ற நூல் எழுதவில்லை. அப்படி இருந்தும் இன்று நூறு ஆண்டின் தொடக்கத்தை எட்டிப் பிடித்திருக்கின்றேன்.

எங்கள் குடும்பத்தில் எவரும் இந்த வயது வரையில் வாழ்ந்து இருந்தது இல்லை.

நான் எப்பொழுதும் அமைதியாய் இருப்பதையே விரும்புகின்றவன். இந்த அமைதி எனக்கு எப்பொழுதும் பிடித்த ஒன்றாகும் மிகப்பதற்றத்தோடு செயல்படுகின்ற கும்பலுக்குள்ளே புகுந்தாலும் நான் மட்டும் மிக அமைதியாகவே செயல்படுவேன்.

எனக்கு அடிக்கடி "ஆன்றவிந்து அடங்கிய கொள்கை சான்றோன்" என்ற பிசிராந்தையார் பாட்டு நினைவிலே இருந்து கொண்டே இருக்கும். இந்த அமைதியே என்னுடையே வாழ்நாளை நீட்டிப்பதற்கு அடித்தளம் என்பதை நான் உணர்கிறேன்.

மேலும் என்னை சிலர் பகைத்துக் கொண்டு செயல்பட்டாலும் நான் அவர்களிடம் சிறிதும் பகை கொள்வதில்லை. முடிந்தால் அவர்களுக்கு நன்மையை செய்வேன். தீமையை அவர்களுக்குச் சிறிதும் செய்யமாட்டேன். என்னுடைய தலைமையான கொள்கை எதுவென்றால் பகைவர்களுக்கும் நன்மை செய்வதே ஆகும். உணர்ச்சி வசப்பட்டு தவறான வழியில் நடப்பவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது.

எப்பொழுதும் எனக்கு மாலை நேரத்தில் நடந்து உலாவுதற்கு விருப்பம் உண்டு. நான் மயிலத்தில் இருக்கும் பொழுது கல்லூரி விட்ட உடனே வீட்டிற்கு வந்து ஏதேனும் உணவு அருந்திவிட்டு, செண்டூருக்கு போகும் வழியில் நடந்து செல்வேன். ஏனேனில் அந்த சாலை போக்குவரத்து இன்றி அமைதியாக இருக்கும் தஞ்சையில் இருக்கும்போது, வடவாற்றங்கரை வழியாக சென்று வேறு வழியாக தஞ்சை வந்துவிடுவேன்.

வேடிக்கையாக, பொழுது போக்கிற்காக நான் எதையும் படித்ததில்லை. அரிய வேண்டிய சிறந்த செய்திகளை நமக்கு புகட்டுகின்ற செய்திகளையை விரும்பி படிப்பேன்.

எவ்வகையிலும் வயிற்றைக் கெடுக்க கூடிய பொருந்தா உணவை உண்பதில்லை கவனமுடன் இருப்பேன் "அற்றான் அளவறிந்து உண்க" என்ற திருக்குறள் எனக்குப் பிடித்தமான குறளாகும்.

இங்ஙனம்
**திரு.அடிகளாசிரியர்**
சித்தநாதேச்சுராதீனம்,
குகையூர்,
01.05.09

# தொழிலியல்

## முதல்வனைப் போற்றுதல்

1. காலம் சிறக்கக் கதிரோன்
எழுந்தனன்; கண்கள் மலர்ந்திடலும்
ஞாலம் சிறந்திட நாங்கள்
எழுந்து நல்லற நன்மைவர
சீலம் வளர்ந்திடச் செய்தொழில்
ஓங்கிடச் சிந்தையின் உள்ளிடத்தே
மூல அறிவு முளைத்திட
வேண்டி முதல்வனைப் போற்றுதுமே.

*திணை – பாடாண்.*

*துறை – கடவுள் வாழ்த்து.*

*பொழிப்புரை*

காலமானது சிறப்பை அடையக் கதிரோன் முளைத்து விளங்கினான். உடனே, எங்கள் விழித்தல் என்னும் தொழில் மலர்ச்சியடைய, உலகம் சிறப்புற வேண்டி நாங்கள் விழித்தெழுந்து நல்லற நன்மை வளர்தல், ஒழுக்கம் உண்டாதல், செய்தொழில் ஓங்குதல் என்னும் இம்மூன்றிற்கும் வேண்டிய மூலமான அறிவு எங்கள் விழியில் உள்ளத்தின் உள்ளிடத்தே தோன்ற வேண்டி, எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய இறைவனை நாங்கள் போற்றுதும்.

முடிபு:- கதிரோன் எழுந்தனன்; கண்ணில் தொழில் மலர நாங்கள் எழுந்து, நன்மை வர, சீலம் வளர்ந்திட, செய்தொழில் ஓங்கிட மூல அறிவு முளைத்திட வேண்டி முதல்வனைப் போற்றுதும்.

## குறிப்பு

கண்ணிற்கு உறக்கம், விழிப்பு என்று இரண்டு தொழில்கள் உள்ளன. அவற்றுள் இங்கே விழிப்பைக் கருதி மலர்ந்த என்று சொல் வைக்கப்பட்டது.

சிலப்பதிகாரத்துள் இளங்கோவடிகள் 'திங்களைப் போற்றுதும்' என்று தொடங்கிய கடவுள் வாழ்த்தில் போற்றுவேன் என்று ஒருமையில் கூறாமல் போற்றுதும் என்று பன்மையில் கூறி உள்ளார். இங்கே போற்றுதும் என்னும் சொல்லில் உள்ள "தும்" என்னும் விகுதி இருபாலாரையும் தன்மையோடு உளப்படுத்தும் பன்மை விகுதி என்க. அதனால் திங்கள் முதலான கடவுட் பொருளை, யானும், முன்னிலையாரும்; படர்க்கையாரு மாகிய இருபாலாரும் சேர்ந்து வணங்குவோம் என்கின்ற பொருளை அவ்விகுதி தருவதாயிற்று. அதனைப்போல இப்பாட்டில் முதல்வனைப் போற்றுதும் என்ற சொல்லிற்கும் பொருள் கொள்க.

## தொழிலியல் தோற்றுவாய்

2. உடம்பொடு கூடிப் பிறந்துளோம்; அதனில்
உற்றிடும் கருவிகள் இரண்டாம்;
திடம்பட அறிய செயல்செய அவையாம்;
திருத்தமாய் அவைகளைக் கொண்டே
இடம்பட அறிந்து செய்தலே தொழிலாம்;
எவ்வகைத் தொழில்களும் உலகில்
கடம்பெற அறிதல், செய்தலென் றிரண்டாய்க்
காசினி நலம்பெற நடக்கும்

*பொ—ரை.*

நாம் உடம்பொடு கூடிப் பிறந்திருக்கின்றோம். அவ்வுடம்பில் பொருந்தியுள்ள கருவிகளும் – அறிவுக் கருவி என்றும், தொழிற்கருவி என்றும் இரண்டாகும். அறிவுக்கருவிகள் அறிய வேண்டியவற்றை அறிவதற்குப் பயன்படும். தொழிற்கருவிகள் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்குப் பயன்படும். அவற்றைக் கொண்டு உலகப் பொருள்களை அறிந்துகொண்டு செயல் செய்தலே தொழிலாகும். ஆகையால் உலகத்தில் உள்ள எல்லாத் தொழில்களும் அறிதல், செய்தல் என்று இரண்டாய் அடங்கும் என்க.

*அறிவுக்கருவியை வடநூலார் – ஞானேந்திரியம் என்பர். அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்தாகும். தொழிற்கருவியை வடநூலார் – கன்மேந்திரியம் என்பர். அவை வாய், கை, மலம்கழிஉறுப்பு, சலம்கழி உறுப்பு, கால் என ஐந்தாகும். இவற்றை வடநூலார் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்பர்.*

## தோற்றுவாய் வினையே உயிர்

3. உணவால் உலகில் உயிர்வாழும்
உணவோ மழையால் உண்டாகும்;
கணமார் மழையும் மக்கள்செயும்
கழிபே ரறத்தாற் பொழிந்திடுமே;
குணமார் அறத்தைச் செய்வதற்குக்
குறித்த பொருளும் மிகவேண்டும்;
அணவும் பொருளும் வினையாலே
அணையும் வினையே உயிராமே!

*பொ–ரை.*

உலகத்தின்கண் உயிர்களெல்லாம் உணவு உண்பதால் வாழ்ந்திருக்கும்; அத்தகைய உணவோ மழை பெய்வதால் உண்டாகும். அத்தகைய நல்ல மழையோ உலக மக்கள் செய்கின்ற மிக்க பெரிய அறத்தினாலே உண்டாகும். அத்தகைய சிறந்த அறத்தை ஒவ்வொருவரும் செய்வதற்குக் குறிப்பிட்ட பொருள்கள் வேண்டும். பொருளும் மக்கள் செய்யும் தொழிலாலே உண்டாகும். ஆகையினாலே, இவ்வுலகம் வாழ்வதற்கு உயிராய் இருப்பது வினை என்னும் தொழிலே ஆகும். என்க.

## தொழில் முதனிலை எட்டு

4. **வினையும் செய்வதும் செயப்படு**
**பொருளுடன் நிலமும்**
**வினையும் காலமும் கருவியும்**
**நிலைஇவற் றுடனே**
**இனைய இன்னதற்கு இதுபயன்**
**என்பன கூட்டி**
**அனைய எட்டுமே வினைமுதல்**
**என்பர்காப் பியரே.**

*பொ–ரை.*

பலவகை வினைகளும், அவ்வினைகளைச் செய்யும் வினைமுதலும், அவ்வினைகளால் உண்டாகும் பொருள்களும், வினைசெய இடமாகிய நிலமும் காலமும், வினைசெய்வதற்கு வேண்டிய பலவகைக் கருவிகளும், இவ்வாறுடன் இன்னாருக்கு இன்ன பயனுக்காக என்னும்

இரண்டையும் கூட்டி அவை எட்டும் ஒரு வினை தோன்றுவதற்குக் காரணமாம் என்பர் தொல்காப்பியர்.

தொல்காப்பிய நூற்பா

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே"

[தொல் – சொல்: வேற்றுமை மயங்கியல் – 29]

இந்நூற்பாவிற்கு "இது வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறுகிறது என்று நுதலியது கூறிவிட்டு,

வினைப்பெயரையும் வினைச்சொல்லையும் தோற்றுவிக்கும் உண், தின், சொல், கொள், வனை என்பன முதலாகிய வினையும், அவ்வினையைச் செய்யும்வினை முதலும், அவ்வினைமுதல் அதனைச்செய்ய அத்தொழிலை உறும் பொருளும் அத்தொழிலைச் செய்கின்ற இடமும், அத்தொழிலைச் செய்கின்ற காலமும், அத்தொழில் அவ்வினைமுதல் தொழிலினைச் செய்யும் காலத்து அதற்குப் பயன்படும் கருவிகளும் ஆகிய ஆறும் ஒருபொருள் நின்று அவ்வினைமுதல் செய்யப்பட்டதனை ஏற்றுக்கோடற்கு உபகாரமாக அப்பொருள் அதனை ஏற்றுக்கொண்டதனால் அவ்வினைமுதலுக்கு இப்பயன் உண்டாக என்று சொல்லப் படும் அத்தன்மைத்தாகிய இரண்டொடும் தொக்கு தொழிலுக்கு முன்நிற்கும் காரணம் அவ்வெட்டு என்று சொல்லுவர் புலவர்.

தொல்காப்பியர் தொழில் முதனிலைகளை வேற்றுமை மயங்கியலில் கூறியுள்ளதால் அவை பல வேற்றுமைகளில் வரும் என்க. அவற்றுள் செய்வது என்னும் செய்பவன்

முதல் வேற்றுமையிலும் மூன்றாம் வேற்றுமையிலும் வரும். செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையில் வரும். நிலமும் காலமும் ஏழாம் வேற்றுமையில் வரும். கருவி மூன்றாம் வேற்றுமையிலும் ஐந்தாம் வேற்றுமையிலும் வரும். இன்னதற்கு இதுபயன் என்பது நான்காம் வேற்றுமையில் வரும். வினை என்பது எல்லா வேற்றுமைக்கும் பயனிலையாக வரும் என்க.

இவ்வாறு மேற்கண்ட நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். ஆகவே இவ்வெட்டுக் காரணங்களால் தொழில் நிகழும் என்பதை அறிந்து கொள்க.

## திருவள்ளுவர் வினைமுதல் ஐந்து என்பர். நன்னூலார் ஆறு என்பர்.

5. அருளுடன் பொருந்தும் செய்பவன் நாளும்
அறிவினின் விளக்கமே அமைய
பொருளுடன் கருவி காலமும் வினையும்
பொருந்துமல் இடங்களை ஆய்ந்தே
தெருளுடன் செய்தல் வேண்டுமென் றுரைத்தான்
திருக்குறள் பொருளறி புலவன்;
உருளுறும் வினைக்குச் செய்பவன் ஆறும்
உற்றகன் முதலெனும் நன்னூல்.

பொ-ரை.

பிறர்க்கு உதவும் கருத்துடன் கூடிய செய்பவன் நாள்தோறும் தன்னுடைய அறிவு விளக்கம் அமைய செயப்படுபொருளோடு, கருவி, காலம், இடம், வினை என்னும் ஐந்தையும் ஆராய்ந்து தெளிவாகச் செயலைச் செய்ய வேண்டுமென்று திருவள்ளுவர் கூறுவர்.

நன்னூலார் அவ்வைந்துடன் செய்பவனையும் கூட்டி அவ்வாறும் வினைமுதல் என்பர்.

"பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."

என்னும் திருக்குறள் வினைமுதல் ஐந்து என்று கூறும்.

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே".

(நன்னூல் - வினை - 1)

என்னும் நன்னூல் நூற்பா திருவள்ளுவர் சொன்ன ஐந்துடன் செய்பவனையும் கூட்டி வினைமுதல் ஆறு என்று கூறும்

## தொழில் முதனிலை
## கீதை கூறுவது

6. எல்லாச் செயற்கும் அதிட்டானம்
எண்ணும் கர்த்தா கரணங்கள்
சொல்லார் செயல்கள் தெய்வமுடன்
சொல்லும் ஐந்து காரணங்கள்
நல்லார் சாங்கிய தத்துவிகள்
நாடி உரைப்பர் என்றானே
மல்லார் கண்ணன் வகுத்துரைத்த
மாண்பார் கீதைப் பதினெட்டில்.

பொ-ரை.

வளம் நிறைந்த கண்ணபிரான் வகுத்துரைத்த கீதையுள் பதினெட்டாம் அத்தியாயத்துள், மக்கள் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் அதிட்டானமும், கர்த்தாவும், கரணங்களும், செயல்களும், தெய்வமும் என்னும் ஐந்தும்

காரணங்களாகும் என்பது சாங்கிய தத்துவத்தின் கொள்கை என்று கூறியுள்ளார்.

கீதையின் சுலோகமும் அதன் பொழிப்புரையும் வருமாறு:

பஞ்சைதானி மஹாபாஹோ காரணானி நிபோதமே!
ஸாங்க்யேக்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே
ஸர்வகர்மணாம்!
அதிஷ்டானம் ததாகர்த்தா கரணம்ச பிருதக்விதம்!
விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம்சை வாத்ரபஞ்சமம்!
(அத்தியாயம் – 18 சுலோகம் 13,14)

பெருந்தோளாய், கர்மத்தின் முடிவுகாட்டும் சாங்கிய சாத்திரத்தில் சகல கர்மங்களின் சித்திக்கென்று பகரப் பட்டுள்ள இந்த ஐந்து காரணங்களையும் என்னிடம் அறிந்துகொள். அவை அதிட்டானம் என்னும் உடலும், கர்த்தாவும், வெவ்வேறு விதமான இந்திரியங்கள் என்னும் கருவியும், பலவிதமாக வேறுபட்ட செயல்களும் இவற்றிற்கு மேல் ஐந்தாவதாகிய தெய்வமும் என்னும் இவைகளாம்.

திருவள்ளுவர் செயப்படு பொருளையே வினைமுதலாகக் கருதி

"பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"
– குறள்–675

என்பர். இங்கே பொருள் என்பது செயப்படுபொருளைக் குறிக்கிறது.

செயப்படுபொருளாகிய கருமத்தை வினைமுதலாகச் சாங்கியர் கருதவில்லை போலும். அதனால் அதனை வினைமுதலாகக் கூறவில்லை. அதிட்டானம் என்பதற்கு உயிர்தங்கி இருப்பதற்கு இடமான உடம்பு என்று உரை கொள்வர். எனவே அது இடத்தை உணர்த்தும்.

வினை நிகழ்வதற்குச் சாங்கியர் தெய்வமும் ஒரு காரணம் என்பர். இது தமிழ் பொருளிலக்கண நூலார்க்கும் உடன்பாடாகும். தமிழர்தம் அகப்பொருள் இலக்கண நூல் இயற்கைப்புணர்ச்சி என்னும் தொழில் தெய்வத்தாலும், முயற்சியாலும் நடக்கும் என்று கூறுகின்றது. இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தால் எய்தும் பொழுது முயற்சியில்லாமல் தானே வந்துகூடும் என்று கூறும்.

"இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி
முயற்சி இன்றி முடிவதாகும்."

(நம்பியகப்பொருள்)

தொல்காப்பியரும் பாலாகிய ஊழ்வினையையே தெய்வம் என்று கருதுகின்றார். அவ்வூழ்வினை, "ஒன்றுவிக்கும் பாலாகிய ஆகூழ்" என்றும், "வேறுபடுத்தும் பாலாகிய போகூழ்" என்றும் இருவகைப்படும். அவ்விரண்டுள் ஒன்றுவிக்கும் பாலாகிய ஆகூழால் இயற்கைப் புணர்ச்சி நிகழும் என்று கூறுகின்றார். இக் கருத்தை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால்து ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

(தொல் – களவியல்)

இயற்கைப்புணர்ச்சி என்பதுள் இயற்கை என்ற சொல் தெய்வத்தைக் குறிக்கும். தெய்வத்தால் எய்துகின்ற புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி என்க. எனவே, உலகத்தில் நடைபெறும் இயல்பான செயல்களை எல்லாம் தெய்வத்தின் செயலால் நிகழ்வனவாக அறிஞர் கருதுகின்றனர். திருவள்ளுவரும் ஆள்வினை உடைமை என்னும் அதிகாரத்துள் ஆள்வினையைச் சிறப்பிக்கும் முகத்தால்,

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்". (குறள் — 619)

என்றார். இக்குறளால் செயலுக்குத் தெய்வமும் முயற்சியும் காரணம் என்பது புலனாகின்றது.

ஆகவே வினைக்குக் காரணம் எட்டு என்பாரும், ஆறு என்பாரும், ஐந்து என்பாரும் ஆகிய இவர்தம் கருத்தை ஆராய்ந்துணரின் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள், இன்னதற்கு இதுபயன், தெய்வம் என்னும் ஒன்பதும் தொழிற் காரணங்கள் என்பது புலப்படும். எனவே, வினைக்குக் காரணங்கள் ஒன்பது என்க.

குறிப்பு

கீதை தொழிலுக்குத் தெய்வமும் ஒரு காரணம் என்று கூறுகின்றது. அப்படிக் கூறுவது சாங்கிய மதத்தின் கொள்கை என்று அது கூறும். ஆனால் சிவஞான முனிவர் சிவஞான போதம் மாபாடியத்துள் சாங்கிய மதக்கொள்கையைக் கூறும்போது, "ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவன் ஒருவன் உண்டென்பது பொய்" என்று குறிப்பிடுகின்றார். எனவே, சாங்கியர் இறைவன் ஒருவன் உண்டென்பதைக் கொள்ளாதவர் போலும். இத்தகைய சாங்கிய மதப் பிரிவினரை நிரீச்சுர சாங்கியம் என்று தக்கயாகப்பரணி உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். எனவே, சாங்கியருள் ஒரு சாரார் தெய்வம் உண்டென்பர். மற்றொரு சாரார் இல்லை என்பர்.

## தொழில் முதனிலை

வினைமுதல் ஐந்து என்பாரும், ஆறு என்பாரும், எட்டு என்பாரும் ஆகிய இவர்தம் கொள்கைகளை எடுத்துக் கூறி ஆராய்ந்ததில் 'வினைமுதல் ஒன்பது என்கின்ற முடிவு' நமக்குக் கிடைத்தது. ஆகவே அவ்வொன்பதை 1. செய்பவன் 2. கருவி 3. பொழுது 4. நிலம் 5. செயல் 6. செயப்படுபொருள் 7. இன்னதற்கு

8. இதுபயன் 9. தெய்வம் என்று முறைப்படுத்திக் கொண்டு அவற்றை முறையே விளக்கிக் கூறத் தொடங்குவோம்.

## 1. செய்பவன்

7. **செய்பவன் தன்னை வினைமுதல் எழுவாய்**
**செய்வது தொழில்முதல் என்பர்;**
**மெய்முத லாகும் செய்பவர் தாமும்**
**மேவுற ஏவுதல் இயற்றல்**
**கய்வரச் செய்யும் கணக்கினால் இரண்டாய்க்**
**கருதிடப் படுவர்அம் முதலை**
**உய்வகை வினையை உள்ளறி முதலென்று**
**உரைத்திடும் திருக்குறள் தானே.**

*பொ—ரை.*

வினைமுதல் ஒன்பதுள் முதலாவதாகிய செய்புவனை அறிஞர் வினைமுதல், எழுவாய், செய்வது, தொழில் முதல் என்று பெயர்கூறி வழங்குவர். அச்செய்பவர் தானும் ஏவிவிடுதல் அன்றி இயற்றுதல் என்கின்ற இரண்டு தொழிலைச் செய்வதனால் ஏவும் வினைமுதல், இயற்றும் வினைமுதல் என்று இரண்டு வகையாக வழங்கப்படுவர். அவ்விருவருள் முதலாவதாகிய ஏவும் வினைமுதலைத் திருவள்ளுவர், ''அவ்வினை உள்ளறிவான்'' என்று வழங்குவர்.

*பாட்டில் ''அம்முதலை'' என்றது ஏவும் வினைமுதலை என்க. நன்னூல் - சொல்லதிகாரம் – பெயரியல் நூற்பா உரையுள் சங்கர நமசிவாயர்,*

ஆலும் ஆனும் ஒடும் ஒடுவும்
சாலும் மூன்றாம் வேற்றுமைக் கதுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
எய்திய தொழின்முதல் இயைபுடன் அதன்பொருள்

என்னும் அகத்திய சூத்திரத்தை எடுத்துக்காட்டி இச் சூத்திரத்துள் தொழில்முதல் என்றது இயக்குபவனாகிய ஏவுதற்கர்த்தாவை என்பர். தொழில் நிலையம் முழுமைக்கும் பொறுப்பேற்று அதனை நல்லமுறையில் இயக்குவதால் அவனுக்குத் தொழில் முதனிலை என்று பெயர் வந்துள்ளது.

"செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்". (குறள் 677)

வினைசெயல்வகை என்னும் அதிகாரத்துள் அமைந்த இக்குறள் வினையை உள்ளறிவானாகிய ஏவும் வினைமுதல், செய்வினையையும், செய்வானையும் செயல் முறையையும் ஆகிய இம்மூன்றையும் ஆராய்ந்து வினை செய்யவேண்டும் என்று கூறுகிறது.

எனவே, ஏவும் வினைமுதலுக்குத் தொழில்முதனிலை என்றும், அவ்வினை உள்ளறிவான் என்றும் பெயர் இருத்தலை உணர்க.

## தொழில் முதனிலை
## 2. கருவி

8. முதல்துணை என்னக் கருவிகள் இரண்டே,
முதல்பணம் மூலமென் றிரண்டாம்;
விதம்வித மான துணைக்கரு விகளே
விளைத்திடும் செயப்படு பொருளை;
உதவிடும் இரண்டும் நல்லவாய் இருப்பின்
உயர்நல செயப்படு பொருளாம்;
இதமிலா திருப்பின் இழிபடு பொருளாம்;
எண்ணுக இயக்குநர் இவற்றை.

*பொ—ரை.*

வினைக்கு முதலாகிய கருவிகள் முதற்கருவி என்றும், துணைக்கருவி என்றும் இரண்டு வகையாய் இருக்கும். அவற்றுள் முதல் கருவி "பணம்" என்றும், மூலப்பொருள் என்றும் இருவகை ஆகும். முன்னே சொன்ன பல வகையான துணைக் கருவிகள் செயப்படு பொருளைத் தோற்றுவிப்பதற்குப் பயன்படும். மேலே கூறிய பணம் ஒழிந்த இரண்டு கருவிகளும் நல்லவையாய் இருப்பின் இவற்றால் நல்ல செயப்படுபொருள்கள் தோன்றும். அவ்வாறு இல்லாமல் இழிந்தவனாயிருப்பின் செயப்படு பொருள்களும் இழிந்த பொருள்களாகவே உண்டாகும். இதனை மேலே கூறிய இரண்டு செய்பவருள் இயக்கும் செய்பவர் [Director] நன்றாக எண்ணிச் செயற்பட வேண்டும்.

## தொழில் முதனிலை

## இடம் - இரண்டு வகையாகும்

கருவிக்கு அடுத்த முறையாக நிற்பவை இடமாகும். இது கால இடமென்றும் நில இடமென்றும் இருவகைப்படும். இதனைச் சாங்கிய நூலார் "அதிட்டானம்" என்பர். இவை இரண்டையும் விளக்குவது கீழ்வரும் பாட்டாகும்.

9. **வினைநிகழ் இடத்தை நிலம்பொழு தெனவே**
**விளம்புவர் இருவகை யாக;**
**அனையதில் நிலந்தான் வினைசெயற் கமைந்த**
**அமைதிசூழ் நல்லிடம் என்க,**

நினைவுறும் பொழுதோ வினைசெயற் கேற்ற
நீர்மைசேர் காலமாம் என்பர்
இனியாகன் னிலமும் காலமும் இயைய
இயற்றிடில் வினைநலம் பெறுமே.

பொ—ரை.

தொழில் நிகழ்வதற்குள்ள இடத்தை நிலம் என்றும், காலம் என்றும் இருவகையாகக் கூறுவர். அத்தகைய இரண்டில் நிலம் என்பது தொழில் செய்வதற்கு ஏற்ற அமைதியான நல்லிடமாம். கருதும் காலமோ தொழில் செய்வதற்கு ஏற்ற நல்ல நீர்மையை உடைய பொழுது ஆகும். இத்தகைய நிலமும் காலமும் ஏற்றதாக அமைந்து விட்டால் தொழில்களெல்லாம் நன்றாக நடைபெறும்.

திருக்குறளாசிரியர் அரசியலில் இடமறிதலையும், காலமறிதலையும் பலவகையாக ஆராய்ந்து கூறியுள்ளார். அவற்றைக் கீழ்வரும் குறள்களால் அறிக.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். [குறள் - 484]

அருவினை என்ப உளவோ கருவியால்
கால மறிந்து செயின். [குறள் - 483]

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல், [குறள் - 489]

இக்குறள்களால் காலத்தொடு இடம் பொருந்தவும், காலத்தொடு கருவி பொருந்தவும், காலத்தொடு செயல் பொருந்தவும் தொழில் செய்வதை விளக்குகின்றார் வள்ளுவர்.

## தொழில் முதனிலை
## இடமாகிய காலம் - மூன்றாவது

**மூன்றாவதாகிய காலத்தின சிறப்பைக் கீழ்வரும் பாட்டால் உணர்க.**

**10. காலத்தைப் பயனின்றிக் கொலையே செய்யும்**
**காலனார் பலர்வாழும் நாட்டின் கண்ணே**
**ஞாலத்தின் உயிரான தொழிலின் கூறு**
**நன்றாக நடவாதே; தொழில்கள் எல்லாம்**
**ஏலத்தான் இடம்கருவி செய்வோ ரெல்லாம்**
**இயைபாக அமைந்திடினும் முடிதற் கேற்ற**
**காலந்தான் கிடைத்துவிடில் மடிதான் இன்றி**
**காரியத்தைச் செய்பவர்க்கே வாய்க்கும் கண்டீர்**

*பொ-ரை.*

காலம் என்கின்ற சிறந்தபொருளைப் பயனே இல்லாமல் கழிப்பவரைக் காலக் கொலையாளர் என்று அறிஞர் கூறுவர். அக்காலக் கொலையாளர்கள் பலர் நாட்டிலே தோன்றி வாழ்ந்தால் உலகம் வாழ்வதற்கு உயிரான தொழில்களெல்லாம் நன்றாக வளராமல் போய்விடும். அந்தக் காரணத்தினால் எல்லாத் தொழிலுக்கும் இடம், கருவி, செய்வோர் என்னும் மூன்றும் ஏற்றமாக அமைந்திருந்தாலும் செயப்படுபொருளைச் செய்வதற்கு ஏற்றகாலம் வாய்ப்பாகக் கிடைத்திருக்கும் பொழுது சோம்பலில்லாமல் அக்காரியத்தை விரைவாகச் செய்து முடித்துவிட வேண்டும். அப்படிச் செய்பவர்க்கே தொழில்கள் வாய்க்கும் என்க.

*"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற் கரிய செயல்"* [குறள் - 489]

என்னும் குறளில் எய்தற்கு அரியது என்பது காலத்தை; தம் ஆற்றலால் எய்துதற்கரிதாலின் "எய்தற்கரியது" என்று கூறினார். இவ்வாறு சிறந்த காலம் ஒருவருக்குக் கிடைத்து விட்டால், தம் சோம்பலால் அதை வீணாக்கிக் கொள்ளாமல் முயற்சியால் அரியபெரிய காரியங்களையெல்லாம் செய்து முடித்துக் கொள்ளவேண்டும் என்பது மேற்பாட்டின் கருத்தாகும்.

## தொழில் முதனிலை
## இடமாகிய நிலம் - நான்காவது

11. **அரணமைவு உடைத்தாய்த் தூய்மையாய் அமைந்த**
**அமைதிசூழ் நல்லிடந் தானே**
**தரணியில் சிறந்த தொழில்செயும் இடமாம்**
**தக்கஅவ் இடங்களைக் கருதில்**
**மாறுற வில்லா நிலையிடம் என்றும்**
**மாறுறும் பலஇடம் என்றும்**
**உரனுற இரண்டாம்; உற்றுழிக் கருதி**
**ஊக்கமாய்த் தொழில்செய வேண்டும்.**

*பொ-ரை.*

பாதுகாவலை உடையதாய்த் தூய்மையாய் அமைந்த அமைதியைத் தருகின்ற இடமே தொழில் செய்வதற்கேற்ற இடமாகும். தகுதி வாய்ந்த அவ்விடங்களை ஆராய்ந்தால் மாறுபாடு இல்லாத நிலையிடமென்றும், மாறுபடுகின்ற நிலையில்லாத பல இடமென்றும் இரண்டு வகையாக இருக்கும். இவ்விடங்கள் பொருந்தியவற்றைக் கருதி ஊக்கமாய்த் தொழில் செய்பவர் தொழில் செய்க.

## தொழில் முதனிலை

### ஐந்தாவது - செயல்

12 செப்பிடும் செய்வோன் கருவியால் இடத்தில்
செய்வது செயலென உரைப்பர்;
*ஒப்பிடும் உளத்தால் உரையினால் உடம்பால்
ஒளிபெறச் செய்வதால் மூன்றாம்;
செப்பிடும் ஆக்கம் அழிவெனப் பட்டுச்
செய்திடும் அச்செயல் தானே
இப்புவி தன்னில் பற்பல வாகி
இருந்திடும் என்றனர் அறிஞர்.

*பொ-ரை.*

சிறப்பாகக் கூறப்படும் செய்பவன் முதற்கருவி, துணைக்கருவி என்கின்ற இரண்டு கருவிகளால் ஓரிடத்தில் ஒரு காலத்தில் பொருந்தி இருந்து செயப்படு பொருளைப் படைப்பதற்காகச் செய்கின்ற தொழில் செயலாகும். அச்செயல், பொருந்திய மனத்தாற் செய்வதென்றும், மொழியாற் செய்வதென்றும், உடம்பாற் செய்வதென்றும் வகைப்பட்டு மூன்றாகி விளங்கும். மேலும் அச்செயல் ஒன்றை ஆக்குவதற்குச் செய்வதென்றும், அழிப்பதற்குச் செய்வதென்றும் வகைப்பட்டு இரண்டாகும். இன்னும் பற்பல காரணங்களால் அச்செயல் பற்பலவாகவும் விளங்கும் என்க.

பற்பலவாகி: என்றதன் விரிவை

*அவைதாம்*

''மனம்மொழி மெய் அறிவாகிய நான்கன்
அசைவே ஆகியும் அவ்வசைவு இன்றியும்

நல்வினை தீவினை வெறுவினை எனநடந்து
அறிந்து செய்வினை அறியாது செய்வினை
அசேதனம் செய்வினை எனவே அமர்ந்தும்
தீவினை நல்வினை சிலமுறை திறம்பிச்
செய்யா இருவினை செய்வினை யாகிச்
செய்யிரு வினையே செய்யா வினையாய்
இன்னும் பலவாம் இலக்கணம் பெறுமே"

என்னும் இலக்கணக் கொத்து நூற்பாவால் (81) அறிக.

*உளத்தாலும் உரையாலும் உடம்பாலும் முயன்று செய்து முடித்தால் வினை முழுமை அடையும் என்பதை,

"நல்ல தொழிலையோ, தீய தொழிலையோ எண்ணுவதால் கால்பகுதியும் சொல்லுவதால் அரைப் பகுதியும் முயன்று செய்வதால் முக்காற்பகுதியும் முடித்து விட்டால் முழுப் பகுதியும் முடியுமென்க." என்பதால் அறியலாம். இக் கருத்தை,

"உன்னுவது ஒருகால் உன்னி
உரைத்திடல் இருகால் உன்னிச்
சொன்னவை மடிவு றாமல்
தொடர்வுறும் முயற்சி முக்கால்
முன்னிய முயற்சி தன்னால்
முடிந்திடில் அதுஒன் றாக
மன்னிடும் உயிர்கள் தோறும்
மருவிரு வினையு மன்றே"

என்னும் வீராகமப் (114) பாட்டால் அறிக.

## தொழில் முதனிலை

## செயப்படுபொருள் – 6

இவ்விலக்கியத்தின் ஆறாம்பாட்டால் கீதை கூறும் தொழில் முதனிலைகள் அதிட்டானமாகிய இடமும்,

கர்த்தாவும், கரணங்கள் என்னும் கருவியும், செயல்களும், தெய்வமும் என்னும் ஐந்துமே என்பதைத் தெரிந்து கொள்ளலாம். கீதை இவ்வைந்தைத் தவிர்த்து வேறு எதையும் தொழில் முதனிலையாகக் கூறாமையால் செயப்படுபொருளைத் தொழில் முதனிலையாக அது கருதவில்லை என்பது புலனாகின்றது. செயப்படுபொருள் தொழிலுக்குப் பின் தோன்றுவதாகையால் அதை முதனிலையாகக் கொள்ள வேண்டுவதில்லை என்று கீதை ஆசிரியர் கருதினார் போலும்.

தொல்காப்பியர் "வினையே செய்வது செயப்படு பொருளே" [வேற்றுமை மயங்கியல்–29] என்ற நூற்பாவில் தொழில் முதனிலைகள் எட்டு என்று குறிப்பிட்டுச் செயப்படு பொருளை மூன்றாம் இடத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

நன்னூல் ஆசிரியரோ, "செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே" [வினை–1] என்ற நூற்பாவில் தொழில் முதனிலைகளை ஆறு என்று கூறி, செயப்படுபொருளை ஈற்றில் வைத்து ஓதுகின்றார். இவர் வினை முடிவில் செயப்படுபொருள் தோன்றும் என்று கருதினார் போலும்.

ஆனால் பொருளிலக்கணத்தை நன்குணர்ந்த திருவள்ளுவர்,

"பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல்" [குறள் – 675]

என்ற குறளில் செயப்படுபொருளை முதலாக வைத்துக் கூறுகின்றார். இவர் இவ்வாறு கூறுவதை ஆராயின் செயப்படு பொருள் பின் தோன்றுவதாயிருந்தாலும் செயப்படுபொருள் ஒன்றையே கருதி மற்றவைகளெல்லாம் தோன்றும் என்ற காரணத்தால் அவர் அதை முன்வைத்து ஓதியது பொருந்துமென்க. இக்குறளில் வந்துள்ள பொருள் என்னும்

சொல்லைச் செயப்படுபொருள் என்று கருதாத பரிமேலழகர் அழியும் பொருளும், ஆகும் பொருளும் என்பர். அறிஞர் ஆராய்க.

## தொழில் முதனிலை
## செயப்படுபொருள் - 6

13. செய்வினைப் பயனாம் செயப்படு பொருளைச்
செப்புவர் அறம்முதல் மூன்றாய்
உய்தரும் இவற்றால் உலகியல் நடக்கும்;
உறுதிசால் இதனைநன் குணர்ந்தால்
மெய்பெறும் வினையே மேதினிக்கு உயிராம்;
மேன்மையை அடைபவ ரெல்லாம்
தெய்வமும் முயல்வும் உடையவ ராகித்
திருவளர் தொழில்களைச் செய்க.

பொ-ரை.

செய்யும் தொழிலுக்குப் பயனாக இருப்பது செயப்படுபொருளாகும். அச்செயப்படுபொருளை அறம் என்றும், பொருள் என்றும், இன்பம் என்றும் மூன்று வகையாகக் கூறுவர். இந்த மூன்றினாலே உலகியல் எல்லாம் நடக்கும் என்க. உலகத்துக்கு உறுதிசான்ற இதனை ஒவ்வொருவரும் நன்றாக உணர்ந்து கொண்டால் "உலகத்திற்கு உயிராக இருப்பது தொழிலே" என்பது புலப்படும். அதனால் இவ்வுலகத்தில் அறத்தாலும், பொருளாலும், இன்பத்தாலும் மேன்மையடைய விரும்புபவரெல்லாம் தெய்வத்தின் திருவருளையும் முயற்சியையும் உடையவராய் இருந்து திருவளரும் தொழில்களைச் செய்து வருக.

குறிப்பு:

அறம் பொருள் இன்பங்களே செயப்படுபொருள் என்னும் செய்தி அறிஞர் எல்லோருக்கும் ஒப்ப முடிந்த

தாகும். இம்மூன்றையுமே பாடலுக்குப் பாடுபொருளாகக் கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியர் கருதுகின்றார்.

"அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய
மும்முதல் பொருட்கும் உரிய என்ப"

[தொல் - செய்யுளியல் - 102]

திருவள்ளுவர் பொருளைக் கூழ் என்பர். கூழ் என்பதற்கு நுகர்பொருள் என்பது பொருள். இதனை அவர் பொருள் செயல் வகை என்னும் அதிகாரத்துள் உணர்த்துவர். இச்செயப்படுபொருளின் சிறப்பை அவர்,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லைப் பொருள்"

[குறள் - 751]

என்னும் குறளால் விளக்குகின்றார்.

## தொழில் முதனிலை
## இன்னும் செயப்படுபொருளின் பலவகை

14. உண்ணும் பொருளும் உடைப்பொருளும்
உறையும் மனைக்காம் பலபொருளும்
எண்ணும் இவற்றைப் பற்றிவரும்
எல்லாப் பொருளும் செய்பொருளாம்;
மண்ணில் இவற்றைத் தொழிலாலே
மாண்பாய்ப் படைக்கும் ஒருநாடே
நண்ணற் குரிய நன்னாடாய்
நாளும் இன்பம் நல்கிடுமே.

*பொ-ரை.*

உண்ணுவதற்கு வேண்டிய பொருட்களும், உடுத்திக் கொள்வதற்கு வேண்டிய பொருட்களும், உறைவதற்குரிய மனைக்கு வேண்டும் பொருட்களும் இம்மூன்றைப் பற்றி

வருகின்ற எல்லாப் பொருட்களும் செய்ய வேண்டிய பொருள்களாகும். உலகத்தில் இவற்றைத் தொழிலாலே மாண்புடைய பொருளாகப் படைத்துக் கொள்கின்ற ஒரு நாடே மக்கள் எல்லாம் நண்ணி வாழ்தற்குரிய நாடாகி எப்போதும் இன்பம் தரும் என்க.

மக்களுக்கு வேண்டிய பொருட்களை ஊண், உடை, உறையுள் என்று மூன்று வகையாகப் பிரிப்பர். அதனையே திருவள்ளுவர் ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல என்பர். [குறள் 1012]

*நன்னாடு*

திருவள்ளுவர் ''படை குடி'' என்னும் குறளால் (381) படையும், குடியும், கூழ் என்னும் பொருளும், அமைச்சும், நட்பும், அரணும் ஆகிய ஆறும் அரசனுக்கு உறுப்பு என்று கூறினார். அவ்வுறுப்பில் ஒன்றாகிய அரணைத் திருவள்ளுவர் இரண்டு அதிகாரத்தால் கூறியுள்ளார் என்னும் செய்தியை, "திருவள்ளுவ மாலை" ஆசிரியரில் ஒருவராகிய போக்கியார் என்னும் புலவர், "உருவல் அரண் இரண்டு'' (பாடல் – 26) என்று கூறுவதால் அறிந்து கொள்ளலாம். அவ்விரண்டு அதிகாரங்கள் ஆவன நாடும், அரணும் ஆகும். எனவே, அவ்வரண்களுள் ஒன்றாகக் கருதப்படுவது நாடென்க. அந்நாடு தள்ளா விளையுளைச் செய்வாரும், தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்ந்து இருக்கின்ற ஒரு இடமாதலின் (731) அது அரசருக்கு அரணாக அமைவதாயிற்று. அம்மூவருள் தள்ளாவிளையுளைச் செய்யும் தொழிலாளிகளே முதல்வராய் அமைதலின், அவர்கள் நல்ல முறையில் தொழில் செய்து நலன்களை உண்டாக்கும் ஒரு நாடே நல்ல நாடாகும் என்ற கருத்தால்,

"எல்லாப் பொருளும் செய்பொருளாம்
மண்ணில் இவற்றைத் தொழிலாலே
மாண்பாய்ப் படைக்கும் ஒருநாடே
நண்ணற் குரிய நன்நாடாய்
நாளும் இன்பம் நல்கிடுமே" (14)

என்று இப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

## தொழில் முதனிலை
## செயப்படுபொருளாகிய பொருளைப் போற்றிவாழவேண்டும்

15. **சிறிய பொருள்கள் பலசேர்ந்தே**
**சிறந்த பொருளாம் சீர்மையினால்**
**நெறியில் சிறுமை பெருமைக்கே**
**நிகழும் நல்ல உறுப்பாகும்**
**சிறுமை என்று கழிக்காமல்**
**சிந்த விடாமல் சிதைக்காமல்**
**நெறியில் பொருளைப் போற்றுபவர்**
**நெடிது நன்றாய் வாழ்வாரே.**

*பொ—ரை.*

சின்ன சின்ன பொருட்கள் பல சேர்ந்தே பெரிய பொருட்குவியல் உண்டாகின்ற தன்மையினாலே முறைப்படி சிறுமை என்பது பெரும் பொருட்குவியலுக்கு நல்ல உறுப்பாய் அமையும். அக்காரணத்தால் எப்பொருளையும் சிறியது என்று கருதி ஒதுக்கி விடாமலும், சிந்த விடாமலும், அழித்து விடாமலும் பொருட்களைப் பாதுகாக்கும் நெறியினரே இவ்வுலகத்தில் வறுமையின்றி நீண்டகாலம் வாழ்பவராவர்.

"பொருள்தனைப் போற்றிவாழ்" என்பது ஆத்திசூடி.

## தொழில் முதனிலை
## இன்னதற்கு என்னும் ஏழாம் வினை முதலும் இதுபயன் என்னும் எட்டாம் வினைமுதலும்

16. இன்னதற்கு என்றல் தான்பிறர்க் கென்னும்
இயல்பினால் இருவகை யாகும்;
சொன்னஎட் டதுவோ இதுபய னெனல்லாம்
சோர்வறச் செய்பவன் தனக்கே
நன்னருண் டாக வருபய னாகும்
நற்பயன் அறமுதல் மூன்றாம்
உன்னிடு மிவையும் தொழில்எழ முதலாய்
உரைத்தனர் உண்மைசால் அறிஞர்.

*பொ—ரை.*

தொழில்முதல் எட்டனுள் இன்னதற்கு என்னும் ஏழாவது முதல் தனக்கு, பிறர்க்கு என்னும் இயல்பினாலே இருவகைப்பட்டு நிற்கும். எட்டாவதாகச் சொன்ன இது பயன் என்பதோ சோர்வில்லாமல் செய்கின்ற செய்பவனுக்கு உண்டாகின்ற பயனாகும். அப்பயன் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றாயிருக்கும். இன்னதற்கு இதுபயன் என்றும் இவையும் தொழில் தோன்றுவதற்குக் காரணமாய் இருத்தலால் இவற்றையும் தொழிற்காரணம் என்று அறிஞர் கூறுவர்.

இன்னதற்கு என அஃறிணை ஒன்றன்பாலால் கூறப் பட்டிருப்பினும், "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே" என்னும் விதியால் இன்னவற்றிற்கு, இன்னவனுக்கு, இன்னவளுக்கு, இன்னவருக்கு என ஏனைத்திணைப்பால் பொருளையும் கொள்க.

இன்னதற்கு – என்ற சொல்லிற்கு ஒருபொருள் நின்று அவ்வினை முதல் செய்யப்பட்டதனை ஏற்றுக் கோடற்கு என்று உரை காண்பர் நச்சினார்க்கினியர்.

இதுபயன் – என்பதற்கு அப்பொருள் அதனை ஏற்றுக் கொண்டதனால் அவ்வினை முதற்கு இப்பயன் உண்டாக என்று பொருள் காண்பர் நச்சினார்க்கினியர்.

இதுபயன் என்பதன் விரிவை:-

"தனக்குப் பயனே, பிறர்க்குப் பயனே
தனக்கும் பிறர்க்கும் சாரிரு பயனே
தனக்கும் பிறர்க்கும் பயன்சார் பிலவே
எனநால் வகையாய் இயன்றே"

(இலக்கணக்கொத்து பாட்டு – 80)

என்பதால் அறிக.

## தொழில் முதனிலை

## ஒன்பதாவது வினைமுதலாகிய தெய்வம்

17. எல்லோர் தமக்கும் பொதுவாக
இருக்கும் தெய்வம் ஒன்றேகாண்
நல்லோர் அதனை இறைகடவுள்
நன்றாய் இயக்கும் இயவுள்என்பர்,
பல்லோர் இயற்றும் பாலுணர்ந்து
பாங்காய் ஊட்டும் பண்பாலே
தொல்லோர் அதனைப் பால்வரைசெய்
தூய தெய்வம் என்பாரே.

பொ–ரை.

இவ்வுலகத்திலே வாழும் எல்லாச் சமயமக்களும் செய்யும் தொழிலுக்கு வினைமுதலாக விளங்கும்

தெய்வம் ஒன்றே என்பதைக் காண்பீராக. அத்தெய்வத்தை அறிவு நலம் படைத்தோர், "இறை" என்றும், "கடவுள்" என்றும், உலகத்தை இயக்குவதால், "இயவுள்" என்றும் கூறுவார்கள். மேலும் பலரும் இயற்றுகின்ற நற்பால் தீப்பால்களை உணர்ந்து அவற்றை முறைப்படி பல உயிர்களுக்கும் ஊட்டும் இயல்பால் அத்தெய்வத்தைத் தொல்காப்பியர் முதலிய தொல்லோர், பால்வரை தெய்வம் என்கின்ற பெயராலும் வழங்குவர்.

*தொல்காப்பியர் சொல்லதிகாரம் கிளவியாக்கத்துள் 58-ஆவது நூற்பாவில் பால்வரை தெய்வம் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க் கினியர் தெய்வம் செய்தது என்ற எடுத்துக்காட்டைக்காட்டி இதனை, "பால்வரை தெய்வம்" என்றார். "இன்ப துன்பத்துக்குக் காரணமாகிய இருவினையையும் (இருபாலையும்) வகுத்தலின்" என்று உரை கூறுவர்.*

## தொழில் முதனிலை

## இதுவும் அது

18. ஒன்றாகி உள்ளுறையும் தெய்வந் தானே
உலகர்செயும் தொழிலியலை ஊன்றி நோக்கி
நன்றான தீதான தொழில்கட் குண்டாம்
நலந்தீங்கை நண்ணுவிக்கும் இதுதப் பாது;
குன்றாமல் தொழில் செய்வீர்! இதனையெண்ணிக்
குலவுமனம் சொல்உடம்பு கூடி நிற்க,
தொன்றான தொழிலதனைத் தூய்மை யாகத்
துறையறிந்து பயன்வரவே துணிந்து செய்வீர்.

*பொ–ரை.*

சமயவாதிகள் பலரும் கருதுகின்றாற்போல் பல வகைத் தெய்வமாகாமல் ஒரே தெய்வமாகி, எல்லாப் பொருள்களிலும் உள்ளுறைந்து விளங்குகின்ற அத்தகைய தெய்வந்தானே உலகமக்கள் செய்கின்ற தொழிலைத் தன் அறிவுக்கண்ணால் ஊன்றிப் பார்த்து, நல்ல செயலுக்கு உண்டாகின்ற நற்பயனையும், தீயசெயலுக்கு உண்டாகின்ற தீயபயனையும், அடைவிக்கும். இத்தெய்வ முறை தவறாமல் நிகழும் என்க. அதனால் ஊக்கம் குறையாமல் தொழில் செய்பவரே! மேலே சொன்ன தெய்வமுறையை எண்ணிப்பார்த்து உங்களுடைய மனம், மொழி, உடம்பு என்னும் மூன்றும் ஒன்றிநிற்க உங்களுடைய வழக்கமான தொழிலைத் தூய்மையாக, செய்யும் முறை அறிந்து பயன் வரும்படிக் கருதிச் செய்வீராக.

*உள்ளுறையை வடநூலார் "அந்தர்யாமித்வம்", என்பர்.*

## தமிழர்தம் பொருளிலக்கணம் கூறும் தொழிற் செய்தி

19. காலமும் நிலமும் இடமென ஆக்கிக்
கருப்பொருள் துணையதாய் அமைய
வாலிதாம் தொழிலை அகம்புறம் என்னும்
வகையினால் செய்பவன் தமிழன்;
கோலஅத் தொழிலில் புறத்திணை வாகைக்
கூறெலாம் மக்கள்தம் தொழிலாம்;
ஏலஇத் தொழில்கள் நலம்பெற நடந்தால்
இருநிலம் நலங்கள்பெற் றிடுமே.

பொ—ரை.

காலத்தையும் நிலத்தையும் இடம் என்கின்ற முதற்பொருளாக வைத்துத் தெய்வம் முதலான கருப் பொருள்களைத் துணையாக வைத்துத் தொழில் என்னும் உரிப்பொருளை அகத்திணைத் தொழில் என்றும் புறத்திணைத்தொழில் என்றும் இருகூறு செய்து பொருளிலக்கணம் செய்தவன் தமிழன் என்க. மேலே கூறிய இருவகைத் தொழிலில் புறத்திணைத் தொழிலைக் கூறும் பகுதியில் வாகைத்திணையில் கூறப்படும் செய்தியெல்லாம் உலக மக்களின் தொழிற்கூறாகும். இத்திணையில் கூறப்படும் தொழில்கள் நலம்பெற நடந்தால் உலகம் நலம் பெறுமென்க.

இதையே தொல்காப்பியம் புறத்திணையியல்,

"வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"

என்று கூறுகின்றது. இந்நூற்பாவில், "தத்தம்கூறு" என்பது மக்களுக்குரிய பலவகைத் தொழிற்பகுதிகள் என்க.

## இதுவுமது
## வாகையின் சிறப்பு

20. அழிவதையும் ஆவதையும் முன்னே எண்ணி
அதன்பின்பு வரும்பயனைப் பின்னே எண்ணி
வழியுடைய வலியறிந்து காலம் நோக்கி
வாகான இடம்கருதித் தெளிந்தோர் தம்மால்
இழிவடையா தியற்றுநர்க்கே கருமம் வாய்க்கும்
இக்கருமம் எச்சமின்றி முற்றுப் பெற்றே
கழிபெரிய பயன்கிடைக்கத் தானும் துய்த்துக்
களிப்படைத்து பிறர்க்குதவின் வாகை ஆமே.

பொ—ரை.

ஆகும் செலவையும் அப்பொழுது வரும் வருவாயையும் முன்னே எண்ணிப்பார்த்து, அதன்பிறகு உண்டாகும் நீடித்த பயன்களைப் பின்னே கருதி, வழிவழியாக வரும் தம்வலிமை அறிந்து, பொருத்தமான காலங்களையும், இடங்களையும், கருதிப்பார்த்து, தெளிந்தசெயல் செய்வோரைக் கொண்டு, நன்றாகச் செய்பவர்க்கே எல்லாச் செயற்பாடுகளும் நன்கு வாய்க்கும் என்க. இச்செயற்பாடுகளைத் தொடங்கி எச்சமாக விட்டு விடாமல் முற்றச்செய்து அதனாலே நல்ல பயன் கிடைக்க அப்பயன்களைத் தானும் துய்த்து மகிழ்வு அடைந்து பிறர்க்கும் உதவி மகிழச் செய்தால் இத்தகையோர் தொழிலில்வாகை சூடியோர் என்க.

"கருமமும் உள்படா போகமும் துய்த்துத்
தருமமும் தக்கோர்க்கே செய்யா – ஒருநிலையே
முட்டின்றி மூன்றும் முடியுமேல் அஃதன்றோ
பட்டினம் பெற்ற கலம்"

என்பது நாலடியார் (74–250) வாக்கு.

## கருமம் எச்சமின்றி முற்றுப்பெறல் வேண்டும் என்பதற்கு வேண்டிய குறிப்பு

தொடங்கிய தொழில் எச்சமின்றி நன்கு முற்றுப் பெறல் வேண்டும். அவ்வாறு முற்றுப்பெற்றால் தொடங்கியவர்களுக்கு மனநிறைவு உண்டாகும். அதனால் மேலும் தொழில் செய்வதில் ஊக்கம் உண்டாகும். ஆதலால் பல தொழிலைத் தொடங்கி அவற்றை எச்சமாக நிறுத்திவிடும் பாங்கைக் காட்டிலும் ஒரு தொழிலைத் தொடங்கி அதை நன்றாக முடித்தலே

மனமகிழ்ச்சிக்கு ஏதுவாகும். அங்ஙனமின்றிப் பல தொழிலைத் தொடங்கி அவற்றை முடிக்கும் வாய்ப்பு இல்லாமல் அவற்றில் அலைந்து கொண்டிருக்கும் மனத்தில் முயற்சி குறையும்; முயற்சி குறைந்தால் தொழில் குறையும் என்பதைக் கீழ்வரும் பாட்டால் அறிக.

பலதொழில் தொடங்கி எச்சமாய் நிறுத்தும்
பாங்கினும் ஒருதொழில் தொடங்கி
நிலைபெற முடித்து மகிழ்தலே நன்றாம்
நிறைமனம் ஒருநெறிப் படலால்
பலதொழில் தொடங்கிப் பற்பல நெறியில்
பரிவுடன் திரிந்திடும் மனத்தில்
நிலைபெறும் முயற்சி குன்றுமே! அதனால்
நேர்படும் தொழிலெலாம் குறையும்.

## திருக்குறளும் தொழிலும்

திருக்குறள் தொழிலைப் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும், முறையாகவும் பலசெய்திகளைக் கூறுகின்றது. அந்நூல் தொழிலை அரசர்க்கும், அமைச்சர்க்கும், குடிமக்களுக்கும் உரியதாமென வகைப்படுத்திக் கொண்டு மூன்று வகையாகக் கூறுகின்றது. அச்செய்திகளை ஆராய்ந்து முதலில் அரசர் தொழிலைக் கூறத் தொடங்குகின்றோம்.

21. வள்ளுவன் என்னு வான்தமிழ்ப் புலவன்
வகுத்துரை திருக்குறள் அதனுள்
ஒள்ளிய அரசர் அமைச்சர்கள் குடிகட்கு
உறுசெயல் ஓதினான்; அவற்றுள்
எள்ளுறல் இன்றி இயற்றுதல், ஈட்டல்
எழில்பெறக் காத்திடல் வகுத்தல்
உள்ளுறும் இவற்றை அரசருக்கு உரித்தாய்
ஓதினான் இறைவர்தம் மாண்பில்.

பொ-ரை.

திருவள்ளுவன் என்னும் பெயரை உடைய உயர்ந்த தமிழ்ப்புலவன் வகைசெய்து கூறிய திருக்குறள் என்னும் இலக்கியத்துள் சிறந்த அரசர், அமைச்சர்கள், குடிமக்கள், ஆகிய இவர்கட்கு உரிய தொழில்களை வகுத்துக் கூறியுள்ளான் அம்மூன்றுள் இயற்றலும், ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் ஆகிய நான்கினையும் அரசர்க்கு உரித்தாக இறை மாண்பு என்னும் அதிகாரத்துள் கூறியுள்ளான்.

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்-285)

தனக்குப் பொருள் வரும் வழிகளை மேன்மேல் உளவாக்கலும், அங்ஙனம் இயற்றியவற்றை ஒருவழித் தொகுத்தலும், தொகுத்தவற்றை அழிவு பெறாமல் காத்தலும், காத்தவற்றைத் தனக்கும் உலகத்திற்குமாக வகுத்துச் செலவு செய்தலும் ஆகிய இவற்றில் வல்லமை உடையவனே அரசனாவான்.

## திருக்குறளும் தொழிலும்
## இதுவும் அது.

22. அரசர்தம் செயலுள் இயற்றலே முதலாம்
அவர்தொழில் புரிந்திடுங் காலைப்
பரசிடும் பெரியோர் உற்றுணை கொண்டு
பரவிய செயல்வகை தெளிந்து
வரமுறு வலியும் காலமும் இடமும்
வகைபெறக் கருதின ராகித்
திரமுடன் தெளிந்து தெரிந்தவர் தம்மால்
தெரிவினை ஆள்தலைச் செய்வர்.

பொ—ரை.

அரசர்க்கு நான்கு தொழில்கள் கூறப்பட்டிருந்தாலும் அவற்றுள் இயற்றுதல் என்னும் தொழிலே சிறந்த முதன்மையான தொழிலாகும். அவர் அத்தொழிலைச் செய்திடும்போது சிறியோரைத் துணைக்கொள்ளாமல் பெரியோரைத் துணைக் கொண்டு, செய்யும்செயற் கூறுபாடுகளைத் தெளிவாகத் தெரிந்து வலிமையையும், காலத்தையும், இடத்தையும் கூறுபாடு தோன்றக் கருதினராகித் தெளிந்து தெரிந்த செய்பவரால், அவர் செய்ய வல்ல வினைகளை அறிந்து அவர்மேல் வைத்து வினை ஆளுதலைச் செய்வர்.

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து – மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும்.

(நீதிநெறி விளக்கம், 51)

## திருக்குறளும் தொழிலும்

### இதுவும் அது.

23. உளத்தினில் ஊக்கம் நிற்க
உற்றிடும் மடிமை போக்கி
அளப்பரும் வினைசெய் கின்ற
ஆள்வினை அமையப் பெற்றே
இளப்புறும் இடுக்கண் எய்தின்
இதனைக்கண் டஞ்சி டாமல்
கிளக்குறும் எழுச்சி கொண்டு
கேடறத் தொழிலைச் செய்வர்.

*பொ-ரை.*

அரசரெல்லாம் தம் உள்ளத்தில் ஊக்கத்தை நிலையாக நிற்கச் செய்து, அயர்ச்சி முதலான காரணங்களால் வருகின்ற சோம்பலைப் போகச்செய்து, கணக்கற்ற வினையைச் செய்கின்ற ஆள்வினை என்னும் உடம்பின் தொழில் அமையப்பெற்று இளைக்கச் செய்யும் இடுக்கண் வந்தால் அதைக்கண்டு சிறிதும் அஞ்சாமல் நல்ல எழுச்சியோடு தொழில்களைக் கேடறச் செய்வர்.

## திருக்குறளும் தொழிலும்
## அமைச்சர் தொழில்

**24.** **அமைச்சர்தம் தொழில்கள் அரசரு கிருந்தே**
**அரசியல் நடத்திடல் ஆகும்;**
**இமையள வேனும் தன்னல மின்றி**
**இறைசெயல் தம்மையே கருதிச்**
**சமைதரு வினையைத் தூய்மையாய்த் திட்பம்**
**சார்ந்திடச் செயல்வகைக் கருதிக்**
**கமைவரச் செய்தல் வேண்டிடும் என்பர்**
**காசினி நலம்புரி புலவர்**

*பொ-ரை.*

உலகநலம் புரிபவராகிய திருவள்ளுவர் அமைச்சர்களின் தொழில்கள் அரசின் அருகே இருந்து அரசியலை நடத்திடல் ஆகும் என்றும், சிறிதளவேனும் தன்னலத்தைக் கருதாமல் முற்றிலும் அரசியலுக்குப் பொருந்தும் செயல்களையே கருதி, மேற்கொண்ட அரசகாரியங்களைத் தூய்மையாகவும், திட்பமாகவும்

பொருந்துமாறு செயற்கூறுபாடுகளை நன்றாக எண்ணிப் பொறுமையாய் இருந்து அமைச்சர்கள் செயல் செய்ய வேண்டும் என்றும் கூறுவர்.

## திருக்குறளும் தொழிலும்

*வினைத்தூய்மையை அமைச்சருக்கு உரிமையாகக் கூறினாலும் அதுவினை செய்வோர் அனைவருக்கும் வேண்டும் என்பது.*

**25. செய்வினைத் தூய்மை யாவர்க்கும் வேண்டும்**
**சிறுகிடின் ஒளிபுகழ் சிறுகும்**
**தெய்வநல் அருளும் தேய்ந்திடும் திகழ்ந்த**
**திருக்கெடும் தொழில்வளம் குறையும்**
**மெய்வகை உடைய பெருமைபோய்ச் சிறுமை**
**மேவிடும், மேவிடில் அவர்க்கு**
**உய்வகை இல்லை உறுவது அழிவே**
**உறுதுணை ஆபவர் இலையே**

*பொ-ரை.*

திருவள்ளுவர் அமைச்சருக்குச் செய்வினைத் தூய்மை வேண்டும் என்று கூறினாலும் இத்தூய்மை தொழில் செய்யும் அனைவருக்கும் வேண்டுமென்க. செய்வினைத் தூய்மை இல்லாவிடில் அவர்க்குப் பலரும் கூறும் பழிப்பே வந்துசேரும். பழிவந்தால் அவருடைய ஒளியும் புகழும் குறையும். அவை குறைதலே அன்றித் தொழிலுக்கு முதற்காரணமாகிய தெய்வத்திருவருளும் தேய்ந்து போகும். இவையெல்லாம் நிகழ்ந்தால் அவர்தம் செல்வம் கெடும். தொழில் வளம்குறையும். பெருமைபோய்ச் சிறுமையே வரும். இவையெல்லாம்

நிகழ்ந்தால் அவர்க்கு உய்யும் வகை இல்லையாம். முடிவில் அவர்க்கு அழிவே வரும். அவ்வழிவைக் காப்பதற்குத் துணையாக வருபவர் ஒருவரும் இல்லை என்க.

## திருக்குறளும் தொழிலும்

திருவள்ளுவமாலையில் (26) போக்கியார் என்னும் புலவர் "குடியதின் மூன்று" என்று கூறுகின்றார். அவர் கருத்தின் படி குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில்செல்வம், நாணுடைமை, குடிசெயல்வகை, உழவு, நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை என்னும் பதின்மூன்று அதிகாரங்களும் குடிகளின் இயல்பைக் கூறுவன ஆகும். இக்கருத்தை உணராத பரிமேலழகர் இவற்றை ஒழிபியல் என்பர். இக்குடிமக்களின் வகையைப்பற்றி இராச இராசன் கல்வெட்டு உழவுக்குடி, கைவினைக்குடி காசாயக்குடி என்று மூன்று வகையாகக் கூறுகின்றது. இக்குடிமக்களுக்குள்ள தொழிலைத் திருக்குறள் குடிசெயல்வகை, உழவு என்னும் இரண்டு அதிகாரத்தால் கூறுகிறது. அக்குடிமக்கள் தொழிலைக் கீழே காண்க.

## குடிமக்கள் தொழில்

26. செய்தொழிற் சிறப்பே சிறப்பெனக் கருதும்
சீர்மைசால் நற்குடி யினர்தாம்
கையொழி யாமல் கருமமே புரிவார்;
காலத்தைப் பயன்படக் கழிப்பார்
மெய்யினுக்கு அணியே உழைப்பெனக் கருதி
மிகமிகத் தொழில்புரி பவரைப்
பையவே கூறும் பணிமொழி யாலே
பண்புடன் தழீஇச்செயல் புரிவார்

*பொ-ரை.*

தம்குடி வளர்வதற்குச் செய்யப்படும் தொழில் சிறப்பையே சிறப்பென எண்ணுகின்ற சீர்மை அமைந்த நல்ல குடிமக்கள், முயற்சி குன்றாமல் எப்போதும் தொழிலையே செய்து கொண்டிருப்பர். தம்முடைய காலத்தைப் பயன் தோன்றக் கழிப்பார். உடம்பிற்கு அழகே உழைப்பென்று கருதி உழைக்கின்ற தம் தொழிலாளிகளை இனிமையாகக் கூறும் பணிவான மொழியால் தழுவிக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து தொழில் செய்வார்.

''கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்'' – (குறள்-1021)

''ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை'' – (குறள்-985)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒரு தொழிலைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையான தொழிலாளரைப் பணிந்து சேர்த்துக்கொண்டு தொழில் நடத்துதல்.

## திருக்குறளும் தொழிலும்

## இதுவும் அது

**27.** **படையும் குடியும் கூழமைச்சும்**
**பண்பார் நண்பும் நல்லரணும்**
**அடைவே அரசின் உறுப்பாகும்**
**ஆன இவற்றுள் குடிமக்கள்**

உடைய தொழிலை அரசியலார்
ஒழித்துத் தமதாக் கொள்ளும்நெறி
நடையிற் சிறந்த தன்றாகும்
நல்ல குடியை அழிப்பதுவாம்

*பொ-ரை.*

காவலுக்குரிய படையும், தொழிலுக்குரிய குடியும், கூழ் என்னும் பொருளும், அறிவிற் சிறந்த அமைச்சும், பண்புடைய நட்பும், பாதுகாத்தலை உடைய நல்ல அரணும் ஆகிய இவ்வாறும் அரசுக்கு உறுப்பு ஆகும். இவற்றுள் குடிமக்கள் செய்துவருகின்ற தொழிலை அரசியலார் நீக்கி, அவர் தொழிலைத் தமதாகக் கொள்கின்ற முறை உலகின் நடைமுறைக்குச் சிறந்ததன்றாகும். அச்செயல் நற்குடி மக்கள் என்னும் உறுப்பை அழிக்கும் செயலாகுமென்க.

## திருக்குறளும் தொழிலும்

### இதுவும் அது

28. குடியைக் காக்க அமைந்திட்ட
குணமார் அரசே அவர்தொழிலைக்
கடிய முயன்றால் அவர்செய்யும்
கடமை சிறந்த தொழில்என்னே!
அடிமை யின்றிக் குடிமக்கள்
அழகாய்த் தொழிலைச் செயும்நாடே
படியில் சிறந்த நாடாகும்;
பண்பார் அரசு இதைஉணரும்

*பொ-ரை.*

குடிமக்களைக் காக்க அரசு அமைந்ததாகும். அத்தகைய அரசே குடிமக்கள் செய்கின்ற தொழிலை ஒழிக்க முயன்றால், குடிமக்கள் செய்கின்ற சிறந்த கடமைத் தொழில் என்ன இருக்கிறது? குடிமக்கள் எல்லாம் அடிமை உணர்வின்றித் தாம்செய்யும் தொழிலை உரிமையோடு அழகாகச் செய்கின்ற நாடே உலகத்தில் சிறந்த நாடாகக் கருதப்படும். பண்பு நிறைந்த அரசு இக்கருத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

## திருக்குறளும் தொழிலும்
## குடிமக்கள் தொழில் உயர்வு

**29.** **உழைக்கும் தொழிலால் பொருளாக்கி**
**உலகிற் குதவும் குடிமக்கள்**
**தழைக்கும் சிறந்த அரசதனைத்**
**தாங்கும் வலிய தூண்போல்வர்;**
**குழைக்கும் அவர்க்கு நற்றுணையாய்க்**
**குலவும் அரசு செயற்பட்டால்,**
**இழைக்கும் அரசுக்கு உயர்வுவரும்;**
**ஏற்றம் உண்டாம் பொருள்நிலையில்.**

*பொ-ரை.*

உழைக்கும் நல்ல தொழிலால் பொருள்களை உண்டாக்கி அவற்றை உலகிற்கு உதவி செய்யும் குடிமக்களானவர் தழைக்கின்ற வலிய அரசைத் தாங்குகின்ற வலிய தூண் போன்றவராவர். வளரும் அவர்க்கு நல்ல துணையாயிருந்து அரசு செயற்பட்டால், அச்செயற்

பாட்டால் அரசுக்கு உயர்வே வரும். பொருள் நிலையில் அதற்கு ஏற்றம் உண்டாகும்.

குடிமக்கள் உயர்ந்தால் கோனாகிய அரசன் உயர்வன் என்பதை:

"வார்சான்ற கூந்தல்! வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும் – சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்,
ஓவாது உரைக்கும் உலகு." (சிறுபஞ்சமூலம்–46)

என்னும் செய்யுளால் அறிக.

## கீதையும் தொழிலும்

## தொழில் ஆராய்வும் தொழில் தொடக்கமும்

30. அறிவுடை யவர்தாம் திரிபிலா அறிவால்
அறிபொருள் ஆய்ந்தன ராகி
செறிவுடன் துணிதல் செயல்முத லாகும்;
சீர்மையாய் இதுநிகழ்ந் ததன்பின்
நெறியுடன் செய்வோர் கருவியால் இடத்தில்
நிலையுறீஇச் செய்வது பின்பாம்,
குறியுடன் எண்ணிச் செய்வதைத் துணிந்து
குயிற்றுக என்பது குறளே.

*பொ–ரை.*

அறிவுடைய ஒரு முதல்வர்தாம் தம்மிடத்தில் உள்ள திரிபில்லாத அறிவினாலே செய்ய வேண்டிய பொருள் திறங்களை எண்ணி ஆராய்வது முதலில் செய்யத்தக்கதாம். இதன்பின் ஆராய்ந்து முடிவு கட்டிய செயப்படுபொருளை முறையாகச் செய்யும் திறன் வாய்ந்த ஒருவர், முதற்கருவி, துணைக்கருவிகளின்

துணைகொண்டு காலமும் நிலமுமாகிய இடங்களிலிருந்து செய்யத் தொடங்குவது பின்நிகழும் நிகழ்ச்சியாகும். இந்த இரண்டு நிகழ்ச்சிகளைத் திருக்குறள் என்னும் இலக்கியம் எண்ணிச் செய்வதைத் துணிந்து பின்செய்யத் தொடங்குக என்று கூறுவதை

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு". –(குறள்–467)

என்ற குறள் நோக்கி அறிக.

இச்செய்தியைக் கீழ்வரும் பகவத் கீதை சுலோகத்தாலும் அறிக.

"ஞானம் ஞேயம் பரிஞ்ஞாதா திரிவிதா கர்மசோதனா
கரணம், கர்மம், கர்த்தோதி த்ரிவிதம் கர்ம சங்க்ரஹம்".

இச்சுலோகம் தொழிலைப் பற்றி "ஆராய்தலை" கர்ம சோதனை என்றும் "செய்தலை" கர்ம சங்கிரகம் என்றும் கூறுகின்றது.

ஒரு காரியத்தை நன்கு எண்ணி எண்ணியவாறு செய்து முடித்தலே சிறப்பாகும். எண்ணுதல் ஒன்றும் செய்தல் மற்றொன்றுமாகச் செய்தால் அதனால் வரும் தீங்கை,

"தற்றூக்கித் தன்றுணையுந் தூக்கிப் பயன் தூக்கி
மற்றது கொள்க மதிவல்லார் – அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானுஞ் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்." (164)

என்னும் பழமொழியால் அறிக.

## கீதையும் தொழிலும்
## தொழில் தொடக்கமாகிய கர்ம சோதனையில்-
## கருத வேண்டியவை இவை எனல்

31. விளைப்பயனைக் கருதாமல் செலவினைஎண் ணாமல்
விளைகின்ற துன்பத்தின் விரிவையறி யாமல்
தினைஅளவும் தன்வலியைக் கருதாமல் செய்தால்
தீங்குவர வழியாகும்; தெளிவாக எண்ணி
நனிமிகுந்த பயன்கள்வரின் நற்செலவும் குறையின்
நலிவின்றி வலிமிகுமேல் நனிவிரைந்து செய்க;
நினைவுபெற எண்ணுதலே வினைத்தொடக்கம் ஆகும்;
நிகழ்வுபெற இதுமுடிந்தால் பின்செய்க வினையே.

*பொ-ரை.*

தொழிலுக்குள்ள செயப்படுபொருளைக் கருதாமலும், ஏற்படும் செலவை எண்ணாமலும், தொழில் செய்யுங் காலத்தில் ஏற்படுகின்ற பலவகைத் துன்பங்களின் விரிவை அறியாமலும், தொழில் செய்வதற்குரிய தன்னுடைய ஆற்றலைத் தெரிந்து கொள்ளாமலும் ஒருவன் தொழில் செய்யத் தொடங்கினால் தேற்றமாகத் தீங்கு வரும் என்க. ஆகையால் தெளிவாக எண்ணிப் பார்த்தே செயல் தொடங்க வேண்டும். எண்ணும்போது மிகுந்த பயன்கள் கிட்டுவதாயின், செலவும் குறைவதாயின் தன்னுடைய வலிமை மிகுந்திருக்குமாயின் இத்தொழிலை மிகவும் விரைந்து செய்க. எண்ணி முடிவு கட்டுதல் வினைத் தொடக்கம் என்னும் கர்ம சோதனை என்க. இக்கர்ம சோதனை முடிந்தபின் இவ்வினையைச் செய்க. இது கர்ம சங்க்ரகம் என்று அறிக.

அறிதல் - கர்மசோதனை
அறிந்துகொண்ட பின் செய்தல் - கர்ம சங்க்ரகம்.
"அறிவி லிருந்து தொழில்தோன்றும் ஆற்றால்
அறிவே தொழிற்கு முதல்."

என்னும் என் குறட்பா நோக்கி தொழிலுக்கு அறிவே முதல் என்பதை அறிக.

## செயல்முறை

32. வினைகளைத் தூய்மை யாக
விழுப்பமாய்ச் செய்தல் வேண்டும்
இனைவரும் தூய்மை இன்றி
இயற்றுதல் செய்ய வேண்டாம்
அனைவரின் நலத்தை நோக்கி
அறத்தோடு செயலே தூய்தாம்
தனைமிகக் கருதிச் செய்யும்
தன்னலச் செயல்போல் லாதே.

*பொ-ரை.*

செயல்களைச் செய்யும்பொழுது அதனைத் தூய்மை யாகவும், திட்பம் வினை செயல்வகை என்னும் விழுப்ப மாகவும் செய்தல் வேண்டும். துன்பம் வருவதற்கு ஏதுவான வினைத்தூய்மையில்லாச் செயல்களைச் செய்ய வேண்டாம். அவை எவை எனின் பிறர் நலத்தைக் கருதி அறநெறி வழுவாமல் செய்தலே வினைத்தூய்மை ஆகும். தன்னலம் ஒன்றையே கருதி அறநெறி வழுவிச் செய்யும் செயல்கள் எல்லாம் வினைத் தூய்மை இல்லாத செயல்கள் ஆகும்.

## செயல்முறை

### ஊக்கமும் மடிமையும்

33. வினைசெய அடியாம் மனமெனும் கருவி
வினையின்மேல் கிளர்தலே ஊக்கம்;
அனையதொன் றின்றி அடங்கலே மடியாம்;
ஆக்கமும் அழிவுமாக் கிடுமே;
நினைவுறும் இரண்டில் திருஅமர் ஊக்கம்
நெஞ்சினுக்கு ஒளிதரும் விளக்காம்;
இனைவுறும் மடியில் முகடிவாழ்ந் திடலால்
இருளினை அதுமிகத் தருமே.

*பொ-ரை.*

தொழில் செய்வதற்கு முதலாய் இருக்கின்ற மனம் என்கின்ற அகக்கருவி தொழில்மேல் கிளர்ந்து எழுதலே ஊக்கமாகும். அவ்வாறின்றி அடங்கியிருப்பதே மடியாகும் என்க. ஊக்கம் ஆக்கத்தைத் தரும்; மடிமை அழிவைத் தரும் என்க. மேலே சொன்ன இரண்டில் திருமகள் அமர்ந்து விளங்கும் ஊக்கமானது நெஞ்சகத்திற்கு ஒளி விளக்காக அமையும். துன்பம் வருவதற்கு ஏதுவான மடியில் மூதேவி வாழ்ந்திடலால் அது நெஞ்சத்திற்கு இருளையே தரும் என்க. முயற்சி ஆக்கத்தைத் தரும் என்பதற்கும் மடி அழிவைத் தரும் என்பதற்கும் கீழ்வரும் குறள் எடுத்துக்காட்டாம்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

முயற்சியில் திரு உள்ளதையும் மடியில் மூதேவி உள்ளதையும் கீழே உள்ள குறளால் அறிக.

"மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாள்உளாள் தாமரையி னாள்"

## செயல்முறை

## ஊக்கமுடையானும் மடிமையுடையானும்

34. ஊக்கமே உடையான் செயலையே கருதி
உறுதியாய் விழிப்புடன் இயங்கி
ஆக்கமே அடையும் நற்செய லதனை
அழகுடன் திருத்தமாய்ச் செய்வான்
ஏக்கமே நிறைந்த மடிமையான் மறந்தே
இரவொடு பகலெல்லாம் உறங்கித்
தீக்குணம் பெற்று மெல்லவே செய்வன்
தெளிவிலான் திருவினை இழந்தான்

*பொ–ரை.*

ஊக்கம் உடைய நன்மகன் செய்யும் செயலை மறவாமல் கருதித் திட்பமுடையவனாய், உறங்காமல் விழிப்புடன் இயங்கி, அழிவைச் செய்யும் தீச்செயல்களை விட்டு ஆக்கத்தை உண்டாக்கும் நல்ல செயல்களை அழகாகவும் திருத்தமாகவும் செய்வன். ஏக்கம் நிறைந்த மடிமை உடையவன் செய்யும் செயல்களை மறந்து, இரவும் பகலும் உறக்கத்தில் கழித்துச் செயலுக்கு உதவாத தீய குணங்களைப் பெற்றுச் செயல்களை விரைந்து செய்யாமல் மெல்லவே செய்வன். இவன் மனத்தெளிவு இல்லாதவன். செல்வங்களையெல்லாம் இழந்தவனாவான்.

*ஊக்கமுடையானை நல்லாண் மகன் என்று கூறி அவன் செயலைக் கீழ்வருமாறு நாலடியார் கூறுதலைக் காண்க:*

"அழல்மண்டு போழ்தில் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் – பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்" (202)

சோம்பலுடையானைத் தொழிற் படுத்தலாகாது என்பதனை "பழமொழி" பாடல் கூறுவது:

"மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும் — கொடியன்னாய்
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்
மூரி யெருத்தால் உழவு" (167)

குறிப்பு: செய்யும் செயல்களைத் திருத்தமாகச் செய்ய வேண்டும். அழகாகச் செய்ய வேண்டும் என்பனவற்றை "செய்வன திருந்தச் செய்", "அழகலாதன செயேல்" என்னும் ஆத்திசூடியால் உணர்க.

## 6)செயல்முறை
## வினைத்தூய்மையும், வினைத்தூய்மை இல்லாமையும்

35. தன்னலத்தை முதல்நிறுத்தி வஞ்சம் தாங்கித்
தகுதியிலாப் பழிச்செயலைச் செய்தல் தானும்
எந்நலமும் பயவாமல் தீங்கே செய்யும்
இக்கருத்தைத் தெளிவாக உணர்தல் வேண்டும்;
நன்செயற்கு முதலாகும் அறத்தெய் வந்தான்
நன்குணர்ந்து பயன்வழங்கும் இதுதப் பாது,
வன்செயலைச் செய்பவரே! கருதிப் பார்மின்
வாராத துன்பமெலாம் வரும்உங் கட்கே

பொ–ரை.

தன்னுடைய நலம் ஒன்றையே முதலில் வைத்து, தனைச் செய்து கொள்வதற்கு வஞ்சகத்தை மனத்திலே

பெற்றுத் தகுதியில்லாத பழிச்செயலாகிய வினைத் தூய்மையற்ற செயலைச் செய்தல் தானும் ஒருவர்க்கு எந்த நலத்தையும் செய்யாமல் தீங்கினையே உண்டாக்கும் என்க. இந்தக்கருத்தை வினைத்தூய்மை இன்றிச் செயல் செய்பவரெல்லாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். ஏன் உணர்ந்துகொள்ள வேண்டுமெனில், நல்ல செயல்களுக்கெல்லாம் முதற்காரணமாய் விளங்கும் அறமாகிய தெய்வந்தான் இவர்கள் செய்கின்ற தீச்செயலை உணர்ந்து தீய பயன்களையே தரும். இது தப்பாமல் வரும். ஆகையால் பழிச்செயலைச் செய்பவர்களே! நீங்கள் நன்றாகக் கருதிப் பாருங்கள். வரத்தகாத துன்பமெல்லாம் பழிச்செயலின் பயனாக உங்கட்கு வரும்.

குறிப்பு: *பழிச்செயலாவன செயப்படு பொருளைப் போலியாகப் படைத்தலும், தீங்குவரப் படைத்தலும் ஆகும்.*

## செயல்முறை

### விரைந்து செய்யவேண்டிய செயலை விரைந்து செய்க

36. பின்விளையும் ஆக்கத்தைப் பிழையா தெண்ணிப்
பின்அதற்காம் அழிவினையும் பெரிதும் நோக்கித்
துன்பங்கள் வருதலையும் அதனைத் தீர்க்கும்
துணைமிகுந்த வலிமையையும் தோன்ற எண்ணி
இன்பங்கள் வரும்என்றே துணிவு தோன்றின்
இறையளவும் தாழாமல் செயலைச் செய்க;
நன்பெல்லாம் வரும்என்ற செயலை நாளும்
நனிவிரைந்து செய்வதுவே நன்மை ஆமே

*பொ-ரை.*

பிற்காலத்தில் தோன்றும் நன்மையைப் பிழையாது கருதி, பிறகு அச்செயலைச் செய்வதற்காகின்ற செலவினையும் மிகவும் நோக்கி, இச்செயலைச் செய்யும் பொழுது ஏற்படும் துன்பங்க்ளையும் அவற்றைத் தீர்க்கின்ற துணையோடு கூடிய வலிமையையும் நன்றாக எண்ணித் தொடங்கிய இச்செயலால் இன்பமே வரும் என்ற துணிவு தோன்றினால், அச்செயலைச் சிறிதும் தாழ்க்காமல் செய்க. நல்லது வரும் என்று துணிந்த செயலை மிக விரைந்து செய்து முடிப்பதே நன்மை ஆகும் என்க.

*சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு*
*தாழ்ச்சியுள் தங்குதல் தீது*

## செயல்முறை

## செயலில் அளவோடு ஊக்கம் கொள்க

*பொ-ரை.*

37. உடல்மெலிந் தாலும் உரைமெலிந் தாலும்
உளம்மெலி யாதஊக் கத்தோர்
அடல்பெற முறையாய்த் தொழில் புரிந்திடுவர்
ஆயினும், அளவிறந் தூக்கின்
இடமெனும் உடலம் தேய்ந்தழிந் திடுமே;
எண்ணியே அளவோடு முயன்றால்
கடல்மலி உலகில் கைவினை சிறக்கும்
கணக்கிலா நலமெலாம் வருமே

செயல் செய்ய முடியாமல் உடம்பு மெலிவடைந் தாலும், பேசமுடியாமல் பேச்சு மெலிந்தாலும் செயலின்கண் உள்ளம் மெலியாத ஊக்கத்தினை உடையோர் யாரோ!

அவர் தொழில்களைத் திட்பமாய் முறையாகச் செய்வர். ஆனால் அளவு கடந்த ஊக்கத்தைக் கொண்டால் உயிர்க்கு இடமாகிய உடம்பு தேய்ந்து அழிந்துபோகும். ஆகையால் உடம்பிற்கு அழிவுவராத அளவான ஊக்கத்தோடு செயலில் முயன்றால் இவ்வுலகத்தில் செயல்கள் எல்லாம் சிறக்கும்; அளவற்ற நன்மைகள் வரும்.

குறிப்பு: உடம்பைச் சாங்கிய நூலார் அதிகரணம் என்பர். அதிகரணம் என்றால் இடம் என்று பொருள். அதனால் இடம் என்னும் உடலம் என்று கூறப்பட்டுள்ளது.

திருவள்ளுவர்,

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும் (476)

என்பர்.

உடம்பின் சிறப்பைத் திருமூலர்

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

என்பர்.

## செயல்முறை

## உழைப்பவர் ஓய்வினைப் பெறுக

38. உழைப்பினைப் புரிவோர் ஓய்வினைப் பெறுக
ஓய்விலா துழைப்பது தீதாம்;
பிழைத்திடில், உடலைப் பிணிமிகப் பற்றும்
பிணியுறின் உழைப்பது கெடுமே;

தழைத்திடும் உழைப்பு கெட்டிடின் உலகம்
தாழ்வுறப் பொருள்நலம் கெடுமே
இழைத்திடும் தொழிலோர் நலமுடன் வாழின்
ஏற்றமாய் உலகம்வாழ்ந் திடுமே

*பொ—ரை.*

உழைக்கும் தொழிலாளரெல்லாம் உழைப்பிற்குப்பின் ஓய்வினைப் பெறவேண்டும். ஓய்வினைப் பெறாமல் எப்போதும் உழைத்துக்கொண்டே இருப்பது தீமையைத் தரும். மேலே சொன்ன நெறியில் தப்பி உழைத்துக் கொண்டே இருந்தால் உடலை நோய் மிகவும் பற்றும். நோய் உற்றால் உழைப்பு கெடும். உழைப்புக் கெட்டால் உலகம் தாழ்ச்சி அடையும்படி பொருள் நலங்கள் கெடும். ஆகையால் தொழில் செய்வோர் நலமுடன் வாழில் உலகம் ஏற்றமாய் வாழ்ந்திருக்கும் என்க

## செயல்முறை

## தொழில் செய்வார்க்கு வேண்டிய மனப்பழக்கமும் ஈட்டிய பொருளைப் பாதுகாத்தலும்

39. மறவாது தொழில்செய்யும் மனப்பழக்கம் வேண்டும்
மாண்புடைய ஏவலராய் மன்னியிருந் தாலும்
திறமாகத் தொழில்செய்ய ஏவிவிட வேண்டும்
திறமுடைய உளியெனினும் கொட்டாமல் வெட்டா;
சிறவாகத் தொழில்செய்து பெரும்பொருளைத் திரட்டிச்
சிறப்பில்லார் வசமாக அப்பொருளை வைப்பின்
பறவாரும் காக்கையினைச் சோற்றினுக்கே காவல்
புரிந்துவைத்த பரிசாகப் பாழ்படும்கண் டீரே

*பொ-ரை.*

ஒவ்வொருவருக்கும் மறவாமல் காலத்தில் தொழில் செய்கின்ற மனப் பழக்கம் வேண்டுமென்க. தொழில் செய்யும் மாண்புகளெல்லாம் நிறைந்த பணியாளராய் இருந்தாலும் அவரைத் திறம்படத் தொழில் செய்யுமாறு தலைவர்கள் - தூண்டிக்கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் திறமுடைய நல்ல உளியாய் இருந்தாலும் கொட்டாப்புளியால் கொட்டினால் அன்றி அவ்வுளி வெட்டாது அல்லவா? அதுபோலும் என்க. சிறப்பாகத் தொழிலைச் செய்து, ஈட்டிய பொருளைச் சிறப்பில்லாத அவருடைய பாதுகாவலிலே வைத்தால் அது பறக்கும் இயல்புடைய காக்கையைச் சோற்றுக்குக் காவல் வைத்தாற் போன்றதாம் என்க.

## செயல்முறை

## தொழிலில் தீயோர் இயல்பும்-நல்லோர் இயல்பும்

**40.** **உய்யும் உயர்ந்த தொழிலிருக்க**
**ஒழித்து நிறுத்திச் செய்யாராய்ச்**
**செய்ய வேண்டாச் சிறுதொழிலைத்**
**தேடிக் கண்டு செய்பவரால்**
**வையம் தனக்கும் நன்மையிலை**
**வாழும் வழியும் அவர்க்கில்லை**
**மெய்யின் வருத்தம் கருதாமல்**
**மேவிச் செய்வார் தொழில்வீரர்**

*பொ-ரை*

தாங்கள் பிழைப்பதற்குள்ள உயர்ந்த தொழில் இருக்கவும் அவற்றைச் செய்ய விரும்பாமல் ஒழித்து

நிறுத்திவிட்டு அத்தொழிலையே செய்யாராகிச் செய்வ தற்குத் தகுதி இல்லாத சிறுமை வாய்ந்த தொழிலைத் தேடிக்கண்டுபிடித்துச் செய்பவராலே உலகத்திற்கும்நன்மை இல்லை. அவர்க்கும் வாழும் வழி இல்லை. செய்யத்தக்க தொழிலை உடம்பிற்கு உண்டாகும் வருத்தத்தைக் கருதாமல் விரும்பிச் செய்பவரே தொழில் வீரர் என்க.

## செயல்முறை

### பெருமை தரும் செயலும் சிறுமை தரும் செயலும்

41. தொழிற்றிறம் அறியும் அறிவினைப் பெற்றுத்
தொழிலினை விடாதுசெய் திடலே
எழிற்றிறம் உடைய பெருமையா கிடுமே;
இகழ்ந்ததை விடுத்திடின் அவர்க்குப்
பழித்திற மெல்லாம் வருவது மட்டே
பசிபிணி துன்பங்க ளுடனே
இழித்திற மெல்லாம் வந்திடும் இதனால்
எண்ணரும் சிறுமைவந் திடுமே

*பொ-ரை*

தொழிலின் பலவகைக் கூறுபாடுகளையெல்லாம் அறியும் அறிவினைப் பெற்றுத் தம் தொழில்களை விடாமல் செய்து வருதலே ஒருவர்க்கு அழகான பெருமையாகும். அவ்வாறின்றித் தொழிற் கூறுபாடுகளை அறியாமல் தம் செயல்களை விடுத்துச் சும்மாயிருத்தலையே செய்து வருவராயின் அவர்க்கு எல்லா வகைப் பழிப்பும் உண்டாகும். அப்பழிப்பே அன்றிப் பசியும், பிணியும், துன்பமும் ஆகிய இவற்றுடன் இழிந்த நிலையும் வரும். இதனால் இவர் சிறுமை அடைவர் என்க. ஒருவர் செய்யும் கருமத்தைக்

கொண்டே அவருடைய பெருமை சிறுமைகள் அறியப்படும் என்னும் செய்தியைக் கீழ்வரும் குறளால் அறிக.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தங்
கருமமே கட்டளைக் கல்." — (505)

பெருமையுடையவர் முறைப்படி செய்தற்கரிய செயல்களை எல்லாம் செய்வார் என்பதை,

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்." — (975)

என்ற குறளால் அறிக.

## செயல்முறை
## அரசியல் தொழிற்கு
## உரியரல்லாதவரும்உரியவரும்

42. அரசைச் சுரண்டி ஏமாற்றி
அதன்றன் பொருளைக் கவர்பவரால்
பரசும் அரசின் பொருள்வளர்ச்சி
பாழா கிடுமே அதைக்கருதி
விரசும் இவரின் தொடர்பறுத்து
விளங்க உழைக்கும் மக்களுக்கே
உரசும் சிறந்த நற்றுணையாய்
உற்றால் அரசு சிறப்படையும்

*பொ-ரை*

அரசினைச் சுரண்டியும் ஏமாற்றியும் அதனுடைய பொருளைக் கவர்கின்ற தீய குடிமக்களால் உயர்ந்த அரசுக்குப் பொருள் வளர்ச்சியெல்லாம் பாழாகிவிடும். இதனை நன்கு கருதி இவருடைய தொடர்பை அரசு அறுத்துக்கொண்டு நன்றாக உழைக்கும் மக்களுக்கே

சிறந்த துணையாய் விளங்கின் அது சிறப்படையும் என்க.

## செயல்முறை

### ஏவலரில் தொழில் செய்வதற்கு உதவாதவர்

43. செய்தால் அன்றோ வினைமுடியும்
செய்ய விரும்பார் மலைத்திருப்பார்
மெய்தான் நோவும் எனவிருந்து
மேன்மேல் உறங்கிச் சோம்பிடுவார்
கைதான் அற்ற இவர்தம்மைக்
கருதின் வினைக்கே உதவாரே;
எய்தான் இன்றி மடிமறவி
இல்லார் வினைக்கு நல்லாரே

*பொ-ரை.*

எத்தொழிலும் அதில் ஒன்றியிருந்து செய்தால் அல்லவா அது முடிவு பெறும்? சிலர் ஒன்றியிருந்து செய்ய விரும்பார். மலைத்திருப்பார். தொழில் செய்தால் உடம்பு நோவும் எனக்கருதிக்கொண்டு மேலும்மேலும் உறங்கிச் சோம்பல்கொண்டு இருப்பர். செயலற்ற இவர்தம் இயல்பைக்கருதின் இத்தகையோரெல்லாம் தொழில் செய்வதற்கு உரியர் அல்லர் என்று விலக்குதலே நன்று. இளைத்தல் இல்லாமலும் மடிந்திருத்தல், மறந்திருத்தல் இல்லாமலும் தொழில் செய்பவரே அதற்கு நல்லார் என்க.

## செயல்முறை

### வினைசெயற்கு விலக்கப்பட்டவர்

44. செய்யும் செயற்குப் பொருத்தமிலார்
சிறந்த அறிவைச் சேராதோர்
பய்ய மொழியும் பணிவில்லார்
பகரும் வஞ்சர் தன்னலத்தோர்

உய்யச் செய்யும் செயல்மறந்தோர்
உவப்பே இல்லோர் நெடுநீரர்
வெய்ய இவர்கள் வினைசெயற்கு
விலக்கப் பட்டோ ராவாரே

*பொ—ரை.*

செய்கின்ற தொழிலுக்குப் பொருத்தமில்லாதவரும், தொழில் செய்வதற்கு வேண்டிய சிறந்த அறிவைப் பெற்றிராதவரும், இனிமையாகப் பேசும் பணிவு இல்லாதவரும், வஞ்சகரும், தன்னலமே கருதுவோரும், தொழிலை மறந்திருப்போரும், உவப்பு இல்லாதவரும், நெடுநீரரும் ஆகிய இவர்கள் வினைக்கு விலக்கப் பட்டார் என்க.

**குறிப்பு:** *பொருத்தமிலாரைப்பற்றி,*
*"பிள்ளையார் கோவில் ஆண்டிக்கும் முயல் வேட்டைக்கும் பொருந்துமா" என்று உலகினர் கூறும் பழமொழியை நோக்குக.*

*பய்ய மொழியும் பணிவில்லார் – கடுஞ்சொல் பேசும் முரடர். உவப்பே இல்லாரை உலகினர் சுடுமூஞ்சி என்பர்.*

## செயல்முறை

### கைவினை கரவேல்

45. தம்மாலே முடிவதையும் செயவெண் ணாமல்
தகுமெதற்கும் பிறர்கையைப் பார்த்து நின்றே
சும்மாவே இருந்துவிடில், சோம்பல் விஞ்சும்
சுறுசுறுப்புத் தேய்ந்துவிடும் உறக்கம் உண்டாம்
கைமாய்ந்து நிற்பவர்க்கு வாழ்வும் உண்டோ?
கைவினையைக் கரவாமல் செய்வோ ருக்கே
இம்மானப் பேருலகில் ஏற்றம் உண்டாம்;
எண்ணரிய செயல்வடிவாம் உலகம் தானே.

*பொ—ரை.*

தம்மாலே செய்ய முடியும் தொழிலையும் செய்ய விரும்பாமல் எந்தச் செயலைச் செய்வதற்கும், பிறராகிய வேலை ஆட்களின் கையையே பார்த்துக் கொண்டு நின்று தொழில் செய்யாமல் சும்மாவே இருக்கப் பழகிவிட்டால், அதனாலே அவரிடத்து ஊக்கம் தோன்றாமல் சோம்பலே மிகுதியாய்த்தோன்றும். சோம்பல் தோன்றவே சுறுசுறுப்புத் தன்மை தேய்ந்துவிடும். தூக்கம் உண்டாகும். தூக்கம் உண்டாகவே செய்யும் தொழில் மாய்ந்துவிடும். தொழில் மாய்ந்தால் வாழ்வு உண்டோ? இவற்றையெல்லாம் கருதி, செய்யும் தொழிலைக் கரவாமல் செய்பவர்க்கே இவ்வுலகத்தில் ஏற்றம் உண்டாகும். உலகம் தொழில் வடிவமாய் உள்ளது.

*கைவினை கரவாமல் தொழிற் செய்பவரின் சிறப்பை,*

*"இரவார் இரப்பார்க்கு ஒன்றீவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்." – (1035)*

*என்னும் குறளாலும் அறிக.*

*"கைவினை கரவேல்" என்பது ஆத்திசூடி.*

## செயல்முறை
## வீணர் செயல்

**46. செய்யும் செயல்கள் மிகஇருக்கச்**
**சிறிதும் அதனைக் கருதாரால்**
**வையம் தன்னில் உண்டுடுத்தி**
**வம்பு பேசித் திரிவோரால்**
**உய்யும் நன்மை சிறிதில்லை;**
**உற்ற நன்மை இலாவிடினும்**
**வெய்ய தீங்கே மிகவுண்டாம்;**
**வீணர் தம்மால் பயன்வருமோ.**

*பொ—ரை*

ஒருவர்க்கு இன்றியமையாமல் செய்ய வேண்டிய தொழில்கள் மிகவும் இருக்கவும் சிறிதளவும் அவற்றை எண்ணாமல் வயிறார உண்டு, அழகாக உடுத்திக் கொண்டு உலகத்திலே வம்பு பேசித் திரிகின்ற அவரால் அவர்க்கோ அவர் குடும்பத்திற்கோ, உலகத்திற்கோ, பிழைப்பதற்கு ஏதுவான நன்மை சிறிதும் இல்லை. நன்மையில்லாவிட்டாலும் தீங்கே விளையும். எப்போதும் வீணாகக் காலத்தைப் போக்குபவரால் எவருக்கும் பயன் வருவதில்லை.

## செயல்முறை

## வினைசெய்வோர் சிறப்பு

47. **ஆள்வினை வழுவ இன்பமே விழையார்**
**ஆள்வினை அதனையே பொருந்தி,**
**நீள்உயர் வினைகள் தம்மையே விழைந்து**
**நிகரறத் தொழில்புரி பெரியோர்**
**கேளிர்க ளுடைய குடும்பாத் சுமையைக்**
**கேடறத் தாங்குதல் பெரிதோ?**
**ஆள்வினை வேள்வி செய்திடும் அவர்க்கே**
**அச்செயல் அரியதா காதே.**

*பொ—ரை.*

ஆள்வினை என்கின்ற தொழில் முயற்சி வழுவும்படி இன்பத்தை விரும்பாதவர் ஆள்வினையோடு பொருந்தி நீண்ட உயர்ந்த வினைகளையே விரும்பி ஒப்புமையறத் தொழில்களைச் செய்கின்ற பெரியோராய் இருப்பர். அத்தகைய பெரியோர் தன் உறவினருடைய குடும்பமாகிய

சுமையைக் கேடு அறத்தாங்குவர் என்று கூறுதல் அவர் செயற்குப்பெரியதன்று. ஏனெனில் அவர்தாம் ஆள்வினைச் செயல்களை எல்லாம் நன்றாக முடித்துவிட்டு அவற்றில் முடிவிலே உலக மக்கள் அனைவர்க்கும் பயன்படும்படி அறவேள்வி செய்பவரன்றோ? அவ்வாறு செய்பவருக்குத் தம் கேளிரைத் தாங்குதல் ஒரு அரிய செயலன்று.

இதனைத் திருவள்ளுவர்,

> "இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பம் துடைத்தூன்றும் தூண்." - (615)

என்று ஆள்வினை உடையானைச் சிறப்பிக்கின்றார். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண் படலத்தில் "ஆள்வினை வேள்வி" என்று ஒரு துறை கூறப்பட்டுள்ளது. ஆள்வினை வேள்வி என்பது,

> "வினை முற்றிய கனைகழலோன்
> மனைவேள்வி மலிவுரைத்தன்று."

என்பதாதலின் தான் செய்ய வேண்டிய வினைகளை முடித்துவிட்டு, அந்தவினை முடிவில் பலர்க்கும் உபகாரமாகப் புண்ணியச் செயல் செய்கின்ற அவர்க்குக் கேளிரைத் தாங்குதல் ஒரு அரிய செயல் அன்று என்பதை மேல்பாட்டு (47) கூறுகின்றது.

## செயல்முறை

## உழைப்பவர் தெய்வம் ஆவர்

48. வையத்தின் பயனான வளங்கள் செய்து
வாழ்வுவர மனத்தினால் ஆழ்ந்து நோக்கிச்
செய்கின்ற நற்செயலைக் காலம் நோக்கிச்
சிறப்பாகச் செய்கின்ற சீர்மை யாளர்

தெய்வத்தின் கூறாவர்; அத்தெய் வத்தைத்
தெரிந்துவழி பட்டொழுகின் தேயம் எல்லாம்
உய்வத்தைப் பெற்றிடுமே! உலகம் வாழ
உறுதொழிலைச் செய்பவரே தெய்வம் கண்டீர்

பொ-ரை.

உலகத்திற்குப் பயன் தருவனவாகிய பொருள் வளங்களையெல்லாம் உண்டாக்கி, அதனால் வாழ்வு வருமாறு மனத்தாலே ஆழ்ந்து நோக்கிச் செய்கின்ற நல்ல தொழிலைத் தேர்ந்தெடுத்து, இடங்காலங்களை நோக்கித் திருத்தமாகச் செய்கின்ற நல்ல தொழிலாளர் தெய்வத்தின் கூறாகக் கருதத் தக்கவராவர். அத் தெய்வத்தைத் தெரிந்து போற்றி அவர்வழி ஒழுகினால் உலகமெல்லாம் உய்யும் என்க. உலகம் வாழ மிக்க தொழில் செய்பவரே தெய்வம் ஆவர் என்பதை உணர்வீராக.

முற்றும்

# பின்னிணைப்பு - 1

## நாட்டில் உண்மை உழைப்பு வளர வேண்டும்*

உழைப்பின் வாரா உறுதியும் உளவோ
எனஉரைத் தனரே இயல்தேர் புலவர்.
உலகர் பற்பல உறுதியை வேண்டின்
ஒருமுக மாக உழைத்தல் நன்றே;
ஆனால்,
உழைக்க விரும்புவோர் உலகிற் சிலரே;
ஒரு சிலர்,
களவுத் தொழிலைக் கலையாய்க் கற்றே
பிறர்பொருள் வெளவும் பெற்றியில் நிற்பர்;
ஒரு சிலர்,
வஞ்சகந் தனையே நெஞ்சம் நிறீஇ
ஏமாற்ற லாலே இரும்பொருள் திரட்டுவர்;
ஒரு சிலர்,
வலிமையி னாலே வன்செயல் புரிந்து
மெலியோர் பொருளை மிகவும் பறிப்பர்;
ஒரு சிலர்,
எத்தொழில் செயவும் எண்ண மின்றி
ஈயென இரக்கும் இழிதொழில் செய்வர்;
இங்கனம்,
களவு புரிந்தும், வஞ்சனை செய்தும்,
வலிந்து பறித்தும், வாயால் இரந்தும்,
புண்ணிய மிலாமல் பொருளினைத் தேடி
உழைக்க விரும்பார் உலகில் வாழ்வர்;
இவர்தம் செய்கை,
உழைப்பவர் பொருளை உறிஞ்சுத லாகும்;

---

*நிறீஇ — நிறுத்தி*

---

* நூலாசிரியரால் இயற்றப்பட்ட 'அரசியல் இயக்கம்' எனும் இலக்கியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட பாடலாகும் [செய்யுள்-77]

இதனால்,
பொருள்வளம் சிறக்கப் புரியும் உழைப்பு
நாட்டில் நசுங்கும்; நல்குரவு உண்டாம்;
உழைத்துப் பொருள்பெற யாரால் முடியும்?
பிழைச்செயல் புரிந்தால் பெரும்பொருள் கிட்டும்
என்னும் எண்ணமே எவர்க்கும் தோன்றின்
உழைப்பில் மக்கள் உள்ளம் ஒன்றார்.
பொருள்வளர்ச் சிக்கே அடிவே ரான
உண்மை உழைப்பை உலகில் உண்டாக்கும்
உபாயம் எதுவோ? உரைப்பீ ராக;
அதுதான் நிற்க,
வேலை இல்லை; வேலை இல்லை;
கற்றவர் தமக்கு வேலை இல்லைஎன,
எல்லா மக்களும் இயம்புகின்றனர்;
வேலை என்பது அரசியல் வேலையா?
அரசியல் வேலை ஆயின், அதுதான்
எல்லா மக்கட்கும் எப்படிக் கிடைக்கும்?
உழவு கைத்தொழில் வாணிகம் என்னும்
இவையே வேலை; இவைநடை பெற்றால்
நிலத்தி லிருந்து விளையும் பொருளும்
கைவினைப் பொருளும் கடிதில் உண்டாம்
அரசின் வேலையால் அவைவிளை யாவாம்
அதனால்,
நாட்டு மக்கட்கு நற்பொருள் உதவும்
உழவு கைவினை வாணிகம் தம்மை
நெடுநீர் மறவி மடிதுயி லின்றிக்
கரவில் லாமல் காசினி புரிய
அரசிய லாளர் ஆவன செய்யின்
வறுமை என்பது நீங்கச்
சிறுமை யுறாமற் சிறக்கும் உலகமென்.

நல்குரவு — வறுமை

பின்னிணைப்பு - 2

# அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

## (அ.சிவபெருமான்)

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள்தங்கி, சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக்குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேத்சுராதீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி. குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்கள்.

அவ்விருவர்க்கும் கி.பி. 1910 - இல் சாதாரண யாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம் நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமிஅய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத் தலைவர் தவத்திரு. மறைமலையடிகளார் கருத்துப்படி திரு.அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

**இளமைக் காலமும் கல்வியும் :**

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கும் அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணியதேவர் இளையவர் கு. சிவப்பிரகாசதேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள் மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் [தாய்மாமன்] வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு.மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக் கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937 - இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப்புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14-07-1938 - இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க்கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1-7-41 இலிருந்து 30-11-41 வரை விரிவுரையாளராகவும் 11-2-42 இலிருந்து 1-7-1950 வரை துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி:

பின்னர் 3-7-1950 இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 4-4-70ல் ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப் பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க்கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு [1977] பணியாற்றினார்.

20-1-1982ஆம் நாளிலிருந்து 1-10-1985 ஆம் நாள்வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக்கொண்டார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக்

கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை [தொல்காப்பிய ஆய்வுப் பணியை] நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம் :

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்*
*விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"*

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே, பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (99) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று. தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*

*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு*

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் [99] தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரை நூல்கள் படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 57 நூல்களைப் படைத்துள்ளார். அவை வருமாறு:

## அடிகளாசிரியர் படைப்புகள்

## 1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள்

(உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை– சரசுவதிமகால் வெளியீடு 1968
3. காலச் சக்கரம்– சரசுவதிமகால் வெளியீடு 1969–79 [சோதிட நூல்]
4. வராகர் ஓராசாத்திரம் [சோதிட நூல்] சரசுவதி மகால் வெளியீடு 1970–8–90
5. சிவஞான தீபம் உரை– சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை–சரசுவதி மகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள்

(தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் உரை 1938

8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967

9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை
[மு. கோவிந்தராசனாருடன்
இணைந்து எழுதியவை] 1967-68

10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956

11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981

12. சிவபுராணச் சிற்றுரை -1986-99-2007

13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990

14. சித்தாந்த சிகாமணி அங்கத் தலத் திரட்டு உரை 1991

15. ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி
எழுச்சி உரை 1991

16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999

17. இட்டலிங்க அபிடேக மாலை
மூலமும் உரையும் 2001

18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002

19. திருமூலரின் முப்பது உபதேசம் 2002

20. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் 2003

21. திருமந்திரத்தில் எட்டாந்தந்திரம் 2005
மூலமும் உரையும்

2. பதிப்பு நூல்கள்
(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

22. வீரசைவப் பிரமாணம் 1936

23. சதமணிமாலை [மூலம் மட்டும்] 1938

24. சிவப்பிரகாச விகாசம் [மூலம் மட்டும்] 1939

25. காமநாதர் கோவை 1957

26. மேன்மைப் பதிகம் 1957

27. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்

28. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணம் 1966
[அரிய ஆராய்ச்சிப் பதிப்பு]

29. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய
நூற்பா விளக்கம் 1977
[சென்னைப் பல்கலைக்கழகம்]
30. தமிழ் இலக்கண இலக்கியங்களில்
சைவசித்தாந்தம் 1978
31. தொல்காப்பியம் - சொல் - இளம்பூரணம் 1990
[தமிழ்ப் பல்கலைக்கழகம்]
32. தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் 1985
[தமிழ்ப் பல்கலைக்கழகம்]
33. தொல்காப்பியம் - பொருள் எட்டு இயல்
மட்டும் [தமிழ்ப்பல்கலைக்கழகம்] 2008
4. படைப்பிலக்கிய நூல்கள்
அ) செய்யுள் வடிவம்
34. பிள்ளைப்பாட்டு 1945
35. திருஅரசிலிக் காதை 1948
36. குழந்தை இலக்கியம் 1963
37. சான்றாண்மை [கோப்பெருஞ்சோழன்
பற்றியது] 1964-1975
38. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
39. அரசியல் இயக்கம் 1981
40. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள்
[குழந்தை இலக்கியம்] 1983
41. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1982
42. உளத்தூய்மை 1984 - 94
43. தண்ணிழல் [திருமுடிக்காரியைப் பற்றிய
அரிய இலக்கியம்] 1990
44. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
45. தொழிலியல் 1993
46. மெய்பொருட் காதை [மெய்பொருள்
நாயனார் வரலாறு]
47. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

[தமிழியக்க வெளியீடு] 1996

48. ஓன்பான்கோன் வணக்கப்பாடல்கள் [தமிழியக்க வெளியீடு] 1993

49. சிறுவர் இலக்கியம் 2003-04

ஆ) உரைநடை

50. எங்களூர் 1939-2004

51. தொடக்கப்பள்ளி - நாடகம் 1949

52. வீரசைவ சிவ பூஜாவிதி 1949

53. விலையேற்றமும் வாழும் வழியும் 1984

54. திருமூலரும் பேருரையும் [தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்] 1998

55. காயத்துள் நின்ற கடவுள் 1999

56. திருவாசக அநுபூதி 2000

57. கீதையின் அறிவுப்பொருள் 2000

58. திருமந்திர உணர்வு 2001

59. தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி 2008

## பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. கலித்தொகை உரை [குறிஞ்சிக் கலி]
2. பிரபுலிங்கலீலை உரை
3. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
4. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
5. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
6. திருக்குறள் உரை [133 குறள் உரை]
7. முப்பால் - உரைநடை
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்
9. தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்

.......................

# தொழிலியல் பாட்டின் முதல் நினைப்பு அகரவரிசை

| பாடல் | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|
| அமைச்சர் தம் | 24 | 33 |
| அரசை | 42 | 52 |
| அரணமைவு | 11 | 16 |
| அரசர் தம் | 22 | 31 |
| அருளுடன் | 5 | 6 |
| அழிவதையும் | 20 | 28 |
| அறிவுடை | 30 | 39 |
| ஆள்வினை | 47 | 56 |
| இன்னதற்கு | 16 | 24 |
| உடம்பொடு | 2 | 2 |
| உடல்மெலி | 37 | 47 |
| உண்ணும் | 14 | 21 |
| உணவால் | 3 | 3 |
| உய்யும் | 40 | 50 |
| உளத்தினில் | 23 | 32 |
| உழைக்கும் | 29 | 38 |
| உழைப்பினை | 38 | 48 |
| ஊக்கமே | 34 | 44 |
| எல்லாச் | 6 | 7 |
| எல்லோர் | 25 | 17 |
| சிறிய | 15 | 23 |
| செப்பிடும் | 12 | 17 |
| செய்பவன் | 7 | 11 |
| செய்வினை | 13 | 20 |
| செய்வினை | 25 | 34 |
| செய்தொழில் | 26 | 35 |
| செய்தால் | 43 | 53 |
| செய்யும் | 44 | 53 |
| செய்யும் | 46 | 55 |

| | | |
|---|---|---|
| தம்மாலே | 45 | 54 |
| தன்னலத்தை | 35 | 45 |
| தொழிற்றிறம் | 41 | 51 |
| படையும் | 27 | 36 |
| பின்விளையும் | 36 | 46 |
| மறவாது | 39 | 49 |
| முதல்துணை | 8 | 12 |
| வள்ளுவன் | 21 | 30 |
| வினைகளை | 32 | 42 |
| வினைசெய | 33 | 43 |
| வினைநிகழ் | 9 | 13 |
| வினைப்பயன் | 31 | 41 |
| வினையும் | 4 | 4 |
| வையத்தின் | 48 | 57 |
| ஒன்றாகி | 18 | 26 |
| காலத்தை | 10 | 15 |
| காலம் | 1 | 1 |
| காலமும் | 19 | 27 |
| குடியை | 28 | 37 |

வேலை இல்லை; வேலை இல்லை;
கற்றவர் தமக்கு வேலை இல்லைஎன
எல்லா மக்களும் இயம்புகின்றனர்
வேலை என்பது அரசியல் வேலையா?
அரசியல் வேலை ஆயின், அதுதான்
எல்லா மக்கட்கும் எப்படிக் கிடைக்கும்?
உழவு கைத்தொழில் வாணிகம் என்னும்
இவையே வேலை இவைநடை பெற்றால்
நிலத்தி லிருந்து விளையும் பொருளும்
கைவினைப் பொருளும் கழிதில் உண்டாம்
அரசின் வேலையால் அவைவிளை யாவாம்.

திரு.அடிகளாசிரியர்